**விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களம் மற்றும் விளையாட்டு கழகங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2012 ஆம் ஆண்டு**

இந்த அறிக்கை இரண்டு பகுதிகளைக் கொண்டதாகும்.

பகுதி I – அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் கணக்குகள் தொடர்பான சுரக்கமான அறிக்கை

பகுதி 2 - ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்பிற்குமான விபரமான அறிக்கை.

**பகுதி I**

**விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தினதும் கணக்குகள் தொடர்பான சுரக்கமான அறிக்கை**

**1. அமைச்சின் கீழுள்ள திணைக்களம்**

| செலவினத் தலைப்பு | திணைக்களப் பெயர் |
|---|---|
| 219 | விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம்<br>விளையாட்டுக் கழகங்கள் |

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த ஏற்பாடுகள் மற்றும் செலவினம்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 2,100,500,000 ஆனதுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,363,159,499 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சினதும் திணைக்களங்களினதும் ஏற்பாடுகளிலிருந்தான தேறிய சேமிப்புக்கள் முறையே ரூபா 144,644,576 தொகையும் ரூபா 592,695,925 தொகையுமாக அதாவது மொத்த தேறிய ஏற்பாட்டில் 35.7 சதவீதத்திற்கும் 61.8 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் நிலவியது. விபரம் பின்வருமாறாகும்.

| ஒதுக்கீட்டுத் தலைப்பு | அமைச்சு /திணைக்களம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய ஏற்பாடு | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்பாடு | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிப்பு |
|---|---|---|---|---|---|---|
| | | மீண்டெழுபவை | மூலதனம் | மீண்டெழுபவை | மூலதனம் | மீண்டெழுபவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 136 | விளையாட்டுத் துறை அமைச்சு | 270,465,000 | 279,330,000 | 220,475,332 | 184,675,092 | 49,989,668 |
| 219 | விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம | 281,535,000 | 1,269,170,000 | 262,376,859 | 695,632,216 | 19,158,141 |
| | மொத்தம் | 552,000,000 | 1,548,500,000 | 482,852,191 | 80,307,308 | 69,147,809 |

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாரளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சு மற்றும் விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்கத்திற்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளிற்காக பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான மீதிகள் பின்வருமாறாகும்.

| | | செலவு | | பெறுவனவு | | வரவு மீதி |
|---|---|---|---|---|---|---|
| தலைப்பு | விடய இல. | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 136 | 136011 | 7,000,000 | 4,663,294 | 2,000,000 | 6,096,263 | 24,000,000 |
| 219 | 219011 | 8,000,000 | 6,746,778 | 4,000,000 | 8,672,743 | 33,000,000 |

## 2.3 பொது வைப்புக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்குரித்தான 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 139,474,973 ஆக காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| அமைச்சு / திணைக்களம் | வைப்புக் கணக்குகள் இல. | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| விளையாட்டுத்துறை அமைச்சு | 6000/0000/00/0015/0048/000 | 13,507,441 |
| விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம் | 6000/0000/00/0015/0100/000 | 125,967,532 |
| மொத்தம் | | 139,474,973 |

# பகுதி II

## ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்பிற்குரிய விபரமான அறிக்கை

## 1. ஒதுக்கீட்டுத் தலைப்பு 136 - விளையாட்டுத்துறை அமைச்சு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

விளையாட்டுத்துறை அமைச்சின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணக்கக் கூற்றுக்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 பெப்ரவரி 11 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும், இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் சமர்ப்பிக்கப்படுவதற்கு உரியவகையிலான உள்ளகக்கட்டுப்பாடுகளைத் தயாரித்தல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 1.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், விளையாட்டுத்துறை அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, இதன் (அ) இல் காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 முதல் 1.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகள் தவிர திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

**(அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை**

(i) அமைச்சால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிராமை தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| பதிவேட்டு வகை | அவதானிப்புகள் |
|---|---|
| 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நிலையான சொத்துப் பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| 2002 நவம்பர் 18 ஆம் திகதிய IVI 2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. |

**1.4 சொத்து முகாமைத்துவம்**

**தீர்க்கப்படாத பொறுப்புகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(i) அமைச்சினால் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தீர்க்கப்படாத 01 வருடத்திற்கும் குறைவான பொறுப்புகள் ரூபா 43,773,226 காணப்பட்டன.

(ii) நி.பி. 94(1) இன் பிரகாரம், வேறு எவ்விதத்திலும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்களின் போது தவிர வருடாந்த மதிப்பீடுகளில் இதற்காக போதிய ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருப் பட்டிருந்தாலன்றி செலவினம் மேற்கொள்ளப்படலாகாத போதிலும் 2012 ஆம் ஆண்டின் போது 14 செலவின விடயங்களுக்குரித்தான ஏற்பாடுகளுக்கு மேலாக ரூபா 26,382,325 தொகையான பொறுப்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

**1.5 வங்கிக் கணக்கு செயற்படுத்துவதிலான குறைபாடுகள்**

**சீராக்கப்பட வேண்டிய மீதி**

விளையாட்டு அமைச்சினால் 2012 திசெம்பர் மாதத்திற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காண்பிக்கப்பட்ட சீராக்கங்கள் தொடர்பான விபரத்தின் படி கண்டறியப்பட்ட தகவல்கள் பின்வருமாறாகும்.

| சீராக்கம் தொடர்பான விபஸரம் | 6 மாதங்களுக்கு மேற்பட்ட 1 வருடத்திற்குக் குறைவானவை | 1 வருடத்திற்கு மேலானவை | மொத்தம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| வழங்கப்பட்டு எனினும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிராத காசோலைகள் | 17,041 | 8,400 | 25,441 |

**1.6 நட்டங்களும் இழப்புகளும்**

கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நட்டங்கள் மற்றும் இழப்புகள் பதிவேட்டின் படி 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 789,750 தொகையான 12 நட்டங்கள் ஏற்பாட்டிருந்தமை வெளிப்பட்டிருந்தன. இதில் ரூபா 25,000 இற்கு மேற்பட்ட 08 நட்டங்கள் ஒதுக்கீட்டுக் கணக்கின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் இந் நட்டங்கள் தொடர்பில் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.7 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை தொடர்பான நிலை பின்வருமாறாகக் காணப்பட்டது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 21 | 22 | - | 01 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 01 | 03 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 66 | 44 | 22 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 73 | 60 | 13 | - |
| | மொத்தம் | 164 | 127 | 38 | 01 |

**1.8 விளையாட்டு மருத்துவ நிறுவகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(i) முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறையொன்று ஸ்தாபிக்கப்படாது மருந்துக் களஞ்சியம் மற்றும் மருந்தகம் ஆகிய இரண்டும் ஔடத உத்தியோகத்தரின் பொறுப்பில் இருந்ததுடன் இதற்காக ஒரே இருப்புப் புத்தகம் பேணப்பட்டிருந்தது. இதன் காரணமாக களஞ்சியத்திலும் மருந்தகத்திலுமுள்ள இருப்பை வெவ்வேறாகக் கணிப்பிட முடியாதிருந்தது. மேலும் 09 மருந்து வகைகளில் மிகையும் 04 மருந்து வகைகளில் பற்றாக்குறையும் காணப்பட்டன.

(ii) 2012 ஆம் ஆண்டின் போது மருந்து இருப்பு மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிராததுடன் 2005 செப்தெம்பர் முதல் 2012 ஏப்ரல் மாதம் வரையான காலப்பகுதியின் போது காலாவதியான பெறுமதி கண்டறியப்படாத 102 மருந்து வகைகள் காணப்பட்டதுடன் இவை தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) ஒவ்வொரு போட்டிக்காக பாரியளவிலான மருந்துகள் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் அவை பயன்படுத்தப்பட்ட விதம் மற்றும் எஞ்சிய மருந்துகள் தொடர்பான விபரங்களை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) ஜிம்னாஸ்டிக் விளையாட்டு வீரர்களுக்காக அவ்வப்போது மருந்துகள் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் விநியோகிக்கப்பட்ட சந்தர்ப்பத்திலேயே இருப்புப் புத்தகத்திற்கு உள்ளடக்கப்படாது ஒரு மாதத்திற்கு விநியோகிக்கப்பட்ட மொத்த அளவும் ஒரே தடவையில் இருப்புப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(v) அங்கீகரிக்கப்பட்ட வைத்திய அதிகாரிகளின் பதவி எண்ணிக்கை 05 ஆன போதிலும் 03 வைத்திய அதிகாரிகள் மேலதிகமாகச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இவர்களில் இருவருக்காக 2013 சனவரி முதல் 04 மாதங்களுக்காக சுகாதார சேவைகள் திணைக்களத்திலிருந்து மீள் நிரப்பல் அடிப்படையில் விளையாட்டு அமைச்சினால் செலுத்தப்பட்டிருந்த ரூபா 756,892 தொகையான சம்பளம் மீளளிக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) உடற்கூற்றியல் பதவிகள் 03 அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் 02 பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு இடம்பெற்றிருக்கவில்லை.

(vii) மருத்துவ ஆய்வுகூட தொழிநுட்பவியலாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு இடம்பெற்றிராததுடன் மருத்துவ ஆய்வுகூட பரிசோதனைகள் வெளி நிறுவகங்களிலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2. ஒதுக்கீட்டு தலைப்பு - 219 விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம்

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணக்கக் கூற்றுக்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 திசெம்பர் 27 ஆம் திகதி திணைக்களப் பணிப்பாளர் நாயத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

**2.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு, மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக்கட்டுப்பாடுகளைத் தயாரித்தல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**2.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களில் (அ) முதல் (உ) வரையில் காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 2.4 முதல் 2.5.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகள் தவிர்ந்தவை, திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

**(அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை**

திணைக்களத்தினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிராமை தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணங்கள் | அவதானிப்புகள் |
|---|---|---|---|
| (i) | நிலையான சொத்துப் பதிவேடு | 2004 பெப்ரவரி 20 ஆம் திகதிய 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை, 2004 ஒக்டோபர் 18 ஆம் திகதிய 174 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 802 | நிலையான சொத்துப் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இது முன்னைய ஆண்டு அறிக்கைகளிலும் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்தது. |
| (ii) | கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 செப்தெம்பர் 12 ஆம் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2002 நவம்பர் 28 ஆம் திகதிய இல. ஐஏஜ/2002/02 | பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | நட்டங்கள் மற்றும் இழப்புகள் பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 | பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | பொறுப்பு பதிவேடு | நிதிப் பிரமாணம் 214 | பொறுப்புப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (v) | அடியிதழ் புத்தகங்கள் பெறலும் அவை தொடர்பான செயற்பாடுகளைப் பதியும் பதிவேடும் | நிதிப் பிரமாணம் 341 | பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (vi) | சம்பளப் பேரேடு | நிதிப் பிரமாணம் 445 | சம்பளப் பேரேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில லை. |
| (vii) | வாகன சம்பவக் குறிப்புப் புத்தகம் | நிதிப் பிரமாணம் 1645 | 267 ஆவது பொது படிவத்தின் பிரகாரம் சம்பவப் பதிவேடு பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (viii) | நுகர்வுப் பொருட் பதிவேடு | நிதிப் பிரமாணம் 1647(அ) | சம்பவப் பதிவேட்டில் பதியப்படாத நுகர்வுப் பொருட்களின் கொள்வனவு மற்றும் விநியோகத்திற்காக நுகர்வுப் பொருட் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

**(ஆ) பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2012 ஆம் ஆண்டின் முதல் 07 மாதங்களின் போது 10 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த ஏற்பாட்டில் 75 சதவீதம் முதல் 99 சதவீதம் வரை உயர்வான சதவீதமும் 12 செலவின விடயங்களுக்காக ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட மொத்த ஏற்பாட்டுத்தொகையில் சனவரி முதல் யூலை வரையிலும் 25 சதவீதமெனும் மிகவும் குறைந்த பெறுமதியாலும் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது 2011 திசெம்பர் 30 ஆம் திகதிய 155 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தால் முறையாக மதிப்பீடு மேற்கொள்ளப்படாமையும், நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு முன்னர் கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிராமையாலும் நேர்ந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(i) 219-2-2-7-2104 செலவின விடயத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூபா 15 மில்லியன் தொகையான ஏற்பாடு முற்றாக எஞ்சியிருந்தது.

(ii) 2011 திசெம்பர் 30 ஆம் திகதிய 155 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 2.5 ஆம் பந்தியின் பிரகாரம் சகல அமைச்சுக்கள்

மற்றும் திணைக்களங்களால் தீர்மானிக்கப்பட்ட சேமிப்புகள் உள்ளடங்கும் வகையில் தயாரிக்கப்பட்ட திருத்தப்பட்ட மதிப்பீடு 2012 சனவரி 16 ஆம் திகதிக்கு முன்னர் தேசிய பாதீட்டுத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் திருத்தப்பட்ட பாதீடு 2012 ஏப்ரல் 26 ஆம் திகதி வரையிலும் தாமதிக்கப்பட்டே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(iii) 219 தலைப்பின் கீழ் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த மதிப்பீட்டின் படி செலவின விடயம் 219-2-2-17-2104 இன் கீழ் 2012 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 600 மில்லியன் தொகையில் ரூபா 157 மில்லியன் தொகை திறைசேரியின் முன்அங்கீகாரமின்றி நி.பி. 66 இற்கு முரணாக தலைப்பு 136 இன் கீழ் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற அமைச்சின் புதிய கட்டிட நிர்மாணிப்பிற்காக வழங்கப்பட்டிருந்தது.

**(இ) கட்டுநிதிக் கணக்குகள்**

**---------------------------------**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதிப் பிரமாணம் 371 (2)(ஆ) இன் பிரகாரம் ‘‘குறித்த பணி’’ துணைக்கட்டுநிதி ஒரு சந்தர்ப்பத்தின் போது ரூபா 20,000 இற்கு மேற்படலாகாத போதிலும் திணைக்களத்தால் திறைசேரி அங்கீகாரமின்றி ரூபா 30,000 முதல் ரூபா 500,000 வரையான துணைக்கட்டுநிதி செலுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(ii) நிதிப் பிரமாணம் 371 (2)(ஆ) இன் பிரகாரம் பணி நிறைவேற்றப்பட்ட உடன் முற்பணம் தீர்க்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்படாது 30 நாட்கள் முதல் 224 நாட்கள் வரையான தாமதத்துடன் முற்பணம் தீர்க்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(iii) இரு உத்தியோகத்தர்களால் ரூபா 10,000 படி முற்பணம் பெற்றுக்கொள்ளப்பட்டு உரிய பணி மேற்கொள்ளப்படாது 09 நாட்களும் 13 நாட்களும், 14 நாட்களும் தாமதித்து மீள தீர்க்கப்பட்டிருந்தன.

(iv) 10 உத்தியோகத்தர்களுக்கு 14 சந்தர்ப்பங்களின் போது தேவைப்பாட்டிற்கு மேலதிகமாக முற்பணம் வழங்கப்பட்டதன் காரணமாக செலவிடப்படாது சேமிக்கப்பட்டிருந்த 41 சதவீதத்திலிருந்து 59 சதவீதமான பணம் 5 நாட்களிலிருந்து 34 நாட்கள் வரையான காலமாக கையில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

(v) 2014 ஏப்ரல் முதல் யூலை வரை 27 உத்தியோகத்தர்களால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 422,500 தொகையான

முற்பணத்தில் ரூபா 253,000 தொகை 32 நாட்களிலிருந்து 127 நாட்கள் வரையான காலம் தாமதித்து தீர்த்துவைக்கப்பட்டிருந்தன.

(vi) 14 உத்தியோகத்தர்களால் முன்னர் பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணத் தொகை தீர்க்கப்பட முன்னர் மீண்டும் முற்பணத் தொகை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. மேலும் முன்னர் பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணத் தொகை தீர்ப்பனவு 3 நாட்களிலிருந்து 135 நாட்கள் வரையான காலம் தாமதித்து தீர்த்துவைக்கப்பட்டிருந்தன.

(vii) ரூபா 974,000 கூட்டுத்தொகையான முற்பணத்தொகை 21 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அவர்களால் வழங்கப்பட்ட முற்பணத்தொகைக்கு மேலதிகமாக ரூபா 852,550 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(viii) குறித்த பணிக்கான முற்பணத்திற்குரித்தான பதிவேட்டில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) முற்பணம் செலுத்தப்படும் உத்தியோகத்தரின் பதவி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொடுப்பனவு உறுதிச்சீட்டு இலக்கம் முற்பணப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(இ) குறித்த செயற்பாடு மேற்கொள்ளப்படும் தினம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) பொது வைப்புக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் 6000/0000/00/0015/0100/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கு மீதி ரூபா 125,967,532 தொகையானதுடன் ரூபா 13,909,113 தொகையான பொது வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 570 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ள பொது வைப்புக் கணக்கின் இறுதி மீதிக்கும் திணைக்களத்தின் மாதாந்த கணக்குப் பொழிப்பிற்கும் இடையே ரூபா 145,000 தொகையான வேறுபாடு நிலவியது.

(iii) நிதிப் பிரமாணம் 565(3) இன் பிரகாரம் பொது வைப்புக்கள் தொடர்பாக இணக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) நிதிப் பிரமாணம் 565(5) இன் பிரகாரம் ஒவ்வொரு மாதத்திற்காக பொது படிவம் 71 இன் கீழ் தயாரிக்கப்பட்ட மாதாந்தக் கணக்குப் பொழிப்பு அடுத்து வரும் மாதம் முடிவடைவதற்கு முன்னர்

கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(v) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வைப்பு பேரேடு சமப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(உ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

1994 ஆகஸ்ட் 18 ஆம் திகதிய 90 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தியின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட தனியான மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் 3.1 இன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட திணைக்களத்தில் கடமையாற்றும் 179 உத்தியோகத்தர்களிடமிருந்து 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 23,937,141 கூட்டுத்தொகையான கடன் மீதிகளுக்குரித்தான சீ.சீ. 10 ஆம் இலக்கக் கடன் பதிவேடு சமப்படுத்தப்பட்டிராத காரணத்தால் அவ் உத்தியோகத்தர்களின் தனியான கடன் மீதிகளை இணக்கம் செய்ய முடியாதிருந்தது.

**2.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுத் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளிற்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விபரிக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | **நிதிப் பிரமாணம்** | | |
| (i) | நிதிப் பிரமாணம் 177 | 54,940 | நாளாந்தப் பெறுவனவுகள் அனைத்தும் அந்நாளில் அல்லது கூடியளவு விரைவாக வங்கியில் வைப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும் வங்கியிலிடப்படாது கையில் வைத்துக் கொள்ளப்பட்டிருந்தது. |
| (ii) | நிதிப் பிரமாணம் 371(2)(அ) | 3,870,225 | 08 உத்தியோகத்தர்களுக்கு 32 சந்தர்ப்பங்களின் போது ரூபா 30,000 முதல் ரூபா 50,000 வரையான முற்பணத் தொகை வழங்கப்பட்டிருந்தது. |
| (iii) | நிதிப் பிரமாணம் | | 268(அ) எனும் பொது படிவத்தின் |

| | |
|---|---|
| 1646 | பிரகாரம் மாதாந்தப் பொழிப்புடன் நாளாந்த ஓட்ட அட்டவணை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் 268(அ) படிவம் எவ்வித வாகனம் தொடர்பாகவும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 2.5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 2.5.1 உள்ளகக் கணக்காய்வு

திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிராததுடன் விளையாட்டு அமைச்சின் கணக்காய்வுப் பிரிவாலும் போதிய உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.5.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

**(அ) விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(i) ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட திணைக்கள வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கெப் வண்டிகளில் பழுதுபார்த்தலுக்காக 2012 யூன் 26 ஆம் திகதி சாரதியால் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த போதிலும் 2013 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரை எவ்வித திருத்தவேலைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) 2011 மார்ச் முதல் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டு திணைக்கள வளாகத்தில் பாதுகாப்பின்றி மோட்டார் கார் ஒன்று நிறுத்திவைக்கப்பட்டிருந்த காரணத்தால் உக்கலடைந்திருந்தது.

(iii) இருப்புப் புத்தகங்களில் உள்ளடக்கப்படாத அவ்வாறே கொள்வனவு செய்யப்பட்ட காலம் மற்றும் கிரயத்தை இனங்காண முடியாத தற்போது பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளபடாது பாதுகாப்பின்றி நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 08 கையுழவு இயந்திரங்கள் காணப்பட்டன. அவற்றை கைதவிர்ப்பிற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்படல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(i) 2010 திசெம்பர் 17 ஆம் திகதிய பீஎப்/மெய்மையாய்வுசபை/01 ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆம் திகதிய 441 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2013 மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர்

மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தால் வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2013 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. நி.பி. 756 இன் பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2013 ஏப்ரல் 10 ஆம் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் மாவட்ட விளையாட்டு நிலையங்கள் 6 இற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2012 ஆம் ஆண்டிற்குரித்தான கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மெய்மையாய்வு சபை அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த மிகை மற்றும் பற்றாக்குறை தொடர்பாகவும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட முடியாத பொருட்கள் தொடர்பாகவும் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) முறையான வகையில் தயாரிக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடொன்று இருக்கவில்லை.

**(இ) தீர்க்கப்படாத பொறுப்புகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(i) திணைக்களத்தால் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாது ஒரு வருடத்திற்கும் குறைவான பொறுப்புக்களின் அளவு ரூபா 354,968,329 ஆகக் காணப்பட்டன.

(ii) நிதிப் பிரமாணம் 94 இன் பிரகாரம் வருடாந்த மதிப்பீட்டு ஏற்பாடுகள் போதுமான வகையில் இருந்தாலன்றி எவ்வித செலவினத்திற்கும் அல்லது பொறுப்பிற்கும் உட்படலாகாத போதிலும் 24 செலவின விடயங்களுக்குரித்தான சேமிப்புக்களை மிகைத்த பொறுப்புகளின் அளவு ரூபா 40,435,690 ஆகக் காணப்பட்டது.

(iii) பொறுப்புக்கள் தொடர்பாக 1994 யூலை 12 ஆம் திகதிய 35/94 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 4.3.3 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) 4 செலவின விடயங்களில் ரூபா 119,856,000 தொகை பிடித்துவைக்கப்பட வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டிற்காக ரூபா 14,945,449 தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்ட காரணத்தால் பிடித்துவைத்தல்கள் அத் தொகையால் குறைவடைந்திருந்தன.

(v) ஒதுக்கீட்டுக் கணக்கில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தால் ரூபா 354,964,697 தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. ஆண்டின் பொறுப்புகளாக ரூபா 23,938,555

மாத்திரம் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 331,026,142 தொகையான பொறுப்புகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.5.3 முகாமைத்துவ நலிவுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

திணைக்களத்திடமுள்ள வான் ஒன்று அமைச்சரவை வாகனக் குழாமிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டின் போது திணைக்களத்தால் ரூபா 119,309 தொகையான பழுதுபார்த்தல் செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதற்கு மேலதிகமாக மோட்டார் கார் ஒன்றும் அமைச்சின் பதவியணியினருக்காக விடுவிக்கப்பட்டிருந்தன.

(ஆ) வேறு நிறுவகத்தின் சொத்துக்கள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்படல்

விளையாட்டுத்துறை அமைச்சின் வாகனமொன்று உரிமை கைமாற்றப்படாது திணைக்களத்தால் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**2.5.4 வங்கிக் கணக்குகளின் செயற்பாட்டிலான குறைபாடு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

**சீராக்கப்பட வேண்டிய மீதி**

விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தால் 2012 திசெம்பர் மாதத்திற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த வங்கி கணக்கிணக்கக் கூற்றில் காண்பிக்கப்பட்ட சீராக்கங்கள் தொடர்பான விபரத்தின் படி 6 மாதங்களுக்கு மேற்பட்ட 1 வருடத்திற்குக் குறைவான இனங்காணப்படாத வரவு மீதி ரூபா 80,161 ஆகக் காணப்பட்டது.

**2.5.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) விளையாட்டு சக்தி நிகழ்ச்சித்திட்டம், வதிவிடப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வேறு பல்வேறு சந்தர்ப்பங்களின் போது உணவு வழங்கப்பட்டமைக்காக 2012 ஆம் ஆண்டின் போது செலவின விடயம் 219-2-2-2-1405 இலிருந்து ரூபா 4,486,295 தொகையான செலவினம் ஏற்கப்பட்டிருந்ததுடன் உணவு வழங்கப்பட்டமைக்காக வழங்குனர்கள் தேர்ந்தெடுக்கப்படுகையில் அரசாங்கத்தின் கொள்வனவு நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. இங்கு 03 நிறுவகங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட விலைகளின் படி, விடுதிக் கட்டுப்பாட்டாளரின் பரிந்துரையில் தனியார் விற்பனை நிலையத்திலிருந்து உணவுப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டமை பணிப்பாளர் நாயகத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மேலும் முன்னைய ஆண்டுகளின் போதும் கொள்வனவு நடைமுறைக்கு மாறாக அவ் வியாபார நிலையத்திலிருந்து உணவுப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) 2008 ஏப்ரல் 28 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இல. 431 இற்கு முரணாக விளையாட்டுக் கழகங்களால் ரூபா 1,262,150 பெறுமதியான விமானப் பயணச்சீட்டுக்கள் தனியார் நிறுவனங்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டு அப் பணம் திணைக்களத்தால் மீளளிக்கப்பட்டிருந்தது.

(இ) சுகததாச தேசிய விளையாட்டு அபிவிருத்தி அதிகாரசபைக்காக இலத்திரனியல் காலக்கணிப்பு (Electronic Timing) முறைமைக்குரித்தான 03 உபகரணங்கள் கொள்வனவு செய்யவதற்காக 2012 மே 22 ஆம் திகதி ரூபா 3,988,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 219-1-1-1508 ஆம் இலக்க மீண்டெழும் செலவின விடயத்தின் ஏற்பாடு இதற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், இவ் உபகரணங்கள் திணைக்களப் புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டிராததுடன் உபகரணங்கள் சுகததாச அதிகார சபைக்கு ஒப்படைக்கப்படுகையில் முறையான நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இக் கொள்வனவிற்காக 2012 மே 08 ஆம் திகதிய கிசங்தெ/கி/2/1 சுகததாச ஆம் இலக்க பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டிருந்த போதிலும் அக் குழுவிற்கு இலத்திரனியல் தொழிநுட்பம் தொடர்பான அறிவினைகள் கொண்ட ஓர் அங்கத்தவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் படி, குழுவால் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் கணக்காய்வில் சர்ச்சைக்குரிய தன்மையை ஏற்படுத்தும் காரணியாக அமைந்தது.

**2.5.6 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

**(அ) கொள்வனவு வழிகாட்டல் நடைமுறையிலிருந்து விலகல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திணைக்களத்தால் தேசிய பெரு விளையாட்டு விழா III ஆம் IV ஆம் கட்டங்களுக்காக ரூபா 556,907 செலவிடப்பட்டு 45,070 சான்றிதழ்கள் அச்சிடப்பட்டிருந்ததுடன் அதன் போதும் கொள்வனவு வழிகாட்டல் நடைமுறை 8.9.3 வழிகாட்டலின் படி ஒப்பந்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) நாவலபிட்டிய ஜயதிலக்க விளையாட்டரங்கில் விடுதிக்கு தேவையான ரூபா 373,317 பெறுமதியான உபகரணங்கள் கொள்வனவு செய்யவதற்காக கொள்வனவு நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. மேலும் உரிய பொருட்கள் களஞ்சியத்திற்கு வழங்கப்படாது நேரடியாக குறித்த விளையாட்டரங்கிற்கு வழங்கப்பட்டதன் காரணமாக இருப்புப் புத்தகங்களுக்கும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இக் கொள்வனவிற்காக பிரதிப் பணிப்பாளர் நிதி அவர்களால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

**(ஆ) 2011 ஆம் ஆண்டின் செப்தெம்பர் 8, 9 ஆம் 10 ஆம் திகதிகளில் மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கில் நடாத்தப்பட்ட XXXVII ஆவது தேசிய பெரும் விளையாட்டு விழாவிற்காக பதக்கங்களும் வெற்றிக்கிண்ணங்களும் கொள்வனவு செய்யப்பட்டமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 24 நிறுவகங்களிடமிருந்து விலைக்கூறல்கள் பெறப்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவ் விலை விசாரணைகள் வழங்குனர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டமைக்கான சான்றுகள் இருக்கவில்லை.

(ii) 2011 மே 27 ஆம் திகதி நடாத்தப்பட்ட கேள்விச் சபைத் தீர்மானத்தின் படி, வழங்குனருக்கு ஒரு பதக்கத்திற்காக ரூபா 1,000 படி 1,434 பதக்கங்களுக்கு ரூபா 1,434,000 இற்குக் கொள்வனவு செய்யவதற்கு தீர்மானிக்கப்பட்டு கேள்வி வழங்கப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக கொள்வனவு நடைமுறை வழிகாட்டியின் 8.9.3 வழிகாட்டலின் பிரகாரம் வழங்குனருடன் ஓர் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) 2011 ஆம் ஆண்டின் மே மாதம் திகதியிடப்படாத கட்டளையொன்று வழங்குனருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்ததுடன் பதக்கங்கள் 2011 யூன் 16 ஆம் திகதிக்கு முன்னர் திணைக்களத்திற்கு வழங்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், 1,369 பதக்கங்கள் 02 நாட்கள் முதல் 24 நாட்கள் வரையான தாமதத்தையடுத்தே பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iv) 1,434 பதக்கங்கள் கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் 1,409 பதக்கங்கள் மாத்திரமே களஞ்சியத்தில் கிடைக்கப்பெற்றிருந்தமை மேலும் கண்டறியப்பட்டது.

**(இ) வெற்றிக்கிண்ணங்கள் மற்றும் பதக்கங்களின் விநியோகம்**

XXXVIII தேசிய மஹா விளையாட்டுப் போட்டிக்காக ரூபா 1,133,100 பெறுமதியான பதக்கங்களைக் கொள்வனவு செய்யப்பட்டமை தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பதக்கங்களின் கொள்வனவிற்காக திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட 10 வழங்குனர்களிடமிருந்து விலைகள் கோரப்பட்டமை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் சகல நிறுவகங்களுக்கும் விலை மனுக்கள் அனுப்பிவைக்கப்பட்டமைக்கான சான்றுகள் இல்லாதிருந்ததுடன் 03 நிறுவகங்கள் மாத்திரம் விலைக் கூறல்களைச் சமர்ப்பித்திருந்தன. இவற்றில் 02 நிறுவகங்கள் மாத்திரம் மாதிரிகளைச் சமர்ப்பித்திருந்தன. மேலும் விலை மனுப்பத்திரத்தில் பொருட்கள் இரண்டு வாரங்களில் விநியோகிக்கப்பட வேண்டுமெனும் நிபந்தனை உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் கட்டளை கையளிக்கப்பட்டிருந்த நிறுவனத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட விலை மனுப்பத்திரத்தில்

அத்தகைய நிபந்தனையொன்று உள்ளடங்கியிருக்கவில்லை. இதன் பிரகாரம் சகல வழங்குனர்களுக்கும் சமனான சந்தர்ப்பம் வழங்கப்பட்டிராமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ii) ரூபா 850 உம் ரூபா 1,400 வீதம் பதக்கங்கள் வழங்கப்படுவதற்காக இரு நிறுவனங்கள் விலைகூறல்களைச் சமர்ப்பித்திருந்ததுடன் குறைந்த விலைக்கு கேள்வி சமர்ப்பித்த நிறுவனத்தின் மாதிரி திணைக்களத்தால் குறிப்பிடப்பட்ட அளவீட்டின் படி சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் பூர்த்தியும் நிறமும் விளையாட்டுப் போட்டிக்காக வழங்கப்படுவதற்கு ஏற்ற நிலையில் இன்மையும் ரூபா 1,400 இற்கு விலைமனுக்கள் சமர்ப்பித்த நிறுவனத்தின் மாதிரி குறித்த அளவீட்டிலும் தனித் தகட்டால் பூர்த்திசெய்யப்பட்டு பொறிக்கப்பட்டுள்ளமையால் அதன் பூர்த்தியும் சிறந்த நிலையில் இருப்பதாக குறிப்பிட்டு இதனைக் கொள்வனவு செய்வதற்கு ஏற்றதென தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு பரிந்துரைத்திருந்தது.

(iii) கேள்விச் சபைத் தலைவரால் அந் நிறுவகத்துடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின் படி அவர்கள் தங்க மற்றும் வெள்ளிப்பதக்கங்களை ரூபா 650 படியும் வெண்கலப் பதக்கத்தை ரூபா 600 படியும் வழங்குவதற்கு உடன்பட்டுள்ளமை கேள்விச் சபைத் தீர்மானத்தில் குறிப்பிட்டு ரூபா 903,300 தொகைக்கு 1,429 பதக்கங்கள் (258 தங்கம், 460 வெள்ளி, 511 வெண்கலப் பதக்கங்கள்) கொள்வனவு செய்வதற்கு 2012 மே 29 ஆம் திகதி தீர்மானிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு வழமைக்கு மாறான வகையில் 54 சதவீதம் முதல் 57 சதவீதம் வரையான அளவிற்கு விலை குறைக்கப்பட்டு மாதிரிகளுக்கு ஏற்ற வகையில் குறித்த விலைக்கு பொருட்களை வழங்க முடியுமா என்பது தொடர்பாக கேள்விச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. 2012 யூன் 08 ஆம் திகதி 1,429 பதக்கங்கள் கோரப்பட்டு இது 02 கிழமைகளுக்குள் விநியோகிக்குமாறு குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இதன் படி பதக்கங்கள் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. இச் சந்தர்ப்பத்தின் போது விலைகூறல்கள் சமர்ப்பித்திருந்த நிறுவனங்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(iv) வழங்கப்பட்டிருந்த பதக்கங்கள் மாதிரிகளுடன் இணங்கியிராததுடன் பூர்த்தியும் தரமும் நலிவான நிலையில் காணப்பட்டன.

(v) 54 வெற்றிக்கிண்ணங்கள் கொள்வனவு செய்யப்படுவதற்காக ரூபா 233,700 தொகையான விலைக்கூறல்களைச் சமர்ப்பித்த கட்டளைகளுக்குப் பதிலாக 54 வெற்றிக் கிண்ணங்கள் ரூபா 229,800 தொகையான திருத்தப்பட்ட விலைக்கூறல்களுக்கு வேறு நிறுவகத்திடமிருந்து கொள்வனவு செய்வதற்கு பணிப்பாளர் நாயகத்தால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதற்காக கேள்விச் சபை தீர்மானம் இருக்கவில்லை.

(vi) 54 வெற்றிக்கிண்ணங்களின் கொள்வனவு செய்வதற்காக 2012 யூன் 14 கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் இவற்றில் 36 வெற்றிக்கிண்ணங்கள் 2012 ஒக்டோபர் 31 ஆம் திகதி வரையிலும்

வழங்குனரால் களஞ்சியத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. கொள்வனவு வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 8.9.3 இன் பிரகாரம், வழங்குனருடன் முறையான உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிராத காரணத்தால் அவரிடமிருந்து தாமதக் கட்டணம் அறவிடப்படுவதற்கு முடியாதிருந்தது.

**2.5.7 அதிகாரப்பொறுப்பற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

திணைக்களத்தின் உடலியல் நிலையத்தின் வருமானம் தேசிய விளையாட்டுக்கள் நிதியக் கணக்கிற்கு செலவு வைக்கப்படுவதுடன் அவ்வாறு செய்வது தொடர்பாக திறைசேரியின் அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.5.8 நட்டங்களும் இழப்புகளும்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய பெரும் விளையாட்டு விழா IV கட்டங்களில் அமைச்சுச் செயலாளரின் பெயர் குறிப்பிடப்பட்டு 1,820 சான்றிதழ்கள் அச்சிடுவதற்காக ரூபா 59,604 செலவிடப்பட்டிருந்ததுடன் செயலாளர் இடமாற்றம் பெற்றுச் சென்ற காரணத்தால் அச் சான்றிதழ்கள் முற்றாக இரத்துச் செய்யப்பட்டு ரூபா 45,944 செலவில் 1,485 சான்றிதழ்கள் மீள அச்சிடப்பட்டிருந்தன. இதன் காரணமாக அமைச்சிற்கு ரூபா 59,604 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) 2011 ஒக்டோபர் 21 ஆம் திகதி முதல் கடமைக்குச் சமூகமளித்திராத ஓர் ஊழியருக்கு 2012 மே வரை அவரது சம்பளமாக ரூபா 186,776 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**2.5.9 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

ரூபா 1,008,424 செலவிடப்பட்டு பழுதுபார்த்தக்கப்பட்ட 2012 மார்ச் 28 ஆம் திகதி 2012 யூலை 20 ஆம் திகதியின் பின்னர் இவ் வாகனம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாதிருந்ததுடன் மேற்கொள்ளப்பட்ட இப் பழுதுபார்த்தல்களின் பின்னர் கி.மீ. 3,108 மாத்திரம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டதையடுத்து இவ் வாகனம் ஓட்டத்திலிருந்து அகற்றப்படுவது பொருளாதார ரீதியாக ஆக்கபூர்வமற்ற செயலென்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**2.5.10 மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை தொடர்பான நிலை பின்வருமாறாகக் காணப்பட்டது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 14 | 07 | 07 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 05 | 02 | 03 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 198 | 163 | 35 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 104 | 76 | 29 | 12 |
| (v) | ஏனையவை (அமைய அடிப்படை) | | 11 | | |
| | மொத்தம் | 321 | 259 | 74 | 12 |

(ஆ) 2004 ஏப்ரல் 22 ஆம் திகதிய சீபீஏ/பீ1/40 ஆம் இலக்க சனாதிபதி சுற்றறிக்கைக்கு முரணாக திணைக்களத்தின் கடமையிலீடுபட்ட காரியாலய பணியாளொருவர் 2011 யூன் மாதம் முதல் அமைச்சின் பதவியணியில் கடமையாற்றுவதற்காக விடுவிக்கப்பட்டிருந்ததுடன் குறித்த காலப்பகுதியின் போது அவருக்குச் சம்பளம் மற்றும் படிப்பணமாக ரூபா 332,055 திணைக்களச் செலவினத் தலைப்பிலிருந்து ஏற்கப்பட்டிருந்தது.

## 3. விளையாட்டுச் சங்கங்கள்

### 3.1 இலங்கை கரப்பந்தாட்டச் சம்மேளனம்

#### 3.1.1 கணக்காண்டு – 2009

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) முற்பணம் வழங்கப்டுகையில் வழங்கப்படும் முற்பணம் வேறாக கணக்கில் பதிவுசெய்யப்பட்டு தீர்க்கப்படும் சந்தர்ப்பத்தின் போது குறித்த செலவினம் கணக்கீடு செய்யப்படுவதற்குப் பதிலாக முற்பணம் செலுத்தப்படும் சந்தர்ப்பத்தின் போது மொத்தத் தொகையும் செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டு தீர்க்கப்படும் சந்தர்ப்பத்தில் மீளச் செலுத்தப்பட்ட பணம் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இவ்வாறு 8 முற்பணங்களுக்குரித்தான ரூபா 341,183 தொகை மேலதிகமான வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 15,818,599 தொகையான 12 கொடுக்கல் வாங்கல்களுக்குரித்தான செலவின விபரங்கள், பற்றுச்சீட்டுக்கள், பட்டியல்கள், அங்கீகாரம் மற்றும் நிலையான சொத்துப் பதிவேடு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் அம் மீதிகளை திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தப்பட முடியாதிருந்தன.

**3.1.2 கணக்காண்டு - 2010**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 7,453,332 கூட்டுத்தொகையான 11 கொடுக்கல் வாங்கல்களுக்குரித்தான செலவின விபரங்கள், பற்றுச்சீட்டுக்கள், பட்டியல்கள், அங்கீகாரம் மற்றும் நிலையான சொத்துப் பதிவேடு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் அம் மீதிகளை திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தப்பட முடியாதிருந்தன.

**3.1.3 கணக்காண்டு – 2011**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 5 சந்தர்ப்பங்களிற்குரித்தான ரூபா 30,075,742 கூட்டுத்தொகையான 05 கொடுக்கல் வாங்கல்களுக்குரித்தான செலவின விபரங்கள், பற்றுச்சீட்டுக்கள், பட்டியல்கள் மற்றும் அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் அம் மீதிகளை திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தப்பட முடியாதிருந்தன.

(ஆ) நெதர்லாந்திலிருந்து அன்பளிப்பாகக் கிடைக்கப்பெற்றிருந்த 05 கரப்பந்தாட்ட விளையாட்டுத் திடல்களுக்கான உபகரணங்கள் உள்ளடங்கிய 04 கொள்கலன்கள் துறைமுகத்திலிருந்து விடுவிக்கப்படுவதில் தாமதம் ஏற்பட்டிருந்தமையால் தாமதக் கட்டணமாக ரூபா 2,673,759 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**3.2 தேசிய ஒலிம்பிக் குழு**

**3.2.1 கணக்காண்டு – 2009**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 198,414,361 கூட்டுத்தொகையான 06 கொடுக்கல் வாங்கல்களுக்குரித்தான செலவின விபரங்கள், பற்றுச்சீட்டுக்கள், பட்டியல்கள், அங்கீகாரம் மற்றும் நிலையான சொத்துப் பதிவேடு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் அம் மீதிகளை திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தப்பட முடியாதிருந்தன.

(ஆ) 2006 இன் 16 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் இரு ஊழியர்களிடமிருந்து உழைக்கும் போதே செலுத்தும் வரி அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்படுவதற்கு தேசிய ஒலிம்பிக் குழுவால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அதிகாரப் பொறுப்பற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிறைவேற்றுக் குழுவின் அங்கீகாரமின்றி ஆண்டின் போது மூன்று வங்கி நடைமுறைக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

(ii) 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சில்லறைக் காசு மீதி ரூபா 127,109 ஆகக் காணப்பட்டதுடன் சில்லறைக் காசுக் கட்டுநிதி எல்லையும் ஒரு கொடுக்கல் வாங்கலின் போது சில்லறைக் காசின் மூலம் செலுத்தப்படக் கூடிய ஆகக் கூடுதலான பணம் எவ்வளவு என்பது குறித்து முன்னர் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தேசிய ஒலிம்பிக் குழுவிற்குரித்தான உடலியல் விருத்தி நிலையம் ரூபா 150,000 தொகையான மாதாந்த வாடகை அல்லது வருமானத்தின் 50 சதவீதமாகிய இரண்டில் கூடுதலான பெறுமதியில் வெளி நிறுவகத்திற்கு வாடகைக்கு வழங்கியிருந்ததுடன் விலை மனுதாரர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக விலைக்கூறல்கள் கோரப்பட்டிருக்கவில்லை. மேலும், விலைக்கூறல்கள் வழங்கப்படுவதற்காக நிறைவேற்றுக் குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) உடன்படிக்கைக் காலம் பூர்த்தியடைந்ததையடுத்து அது நீடிக்கப்படாது இந் நிறுவகத்திற்கு உடலியல் விருத்தி நிலையத்தை நடாத்துவதற்காக இடமளிக்கப்பட்டிருந்ததுடன் 2010 ஆகஸ்ட் 08 ஆம்திகதி வரையில் 06 மாதங்களுக்குரித்தான ரூபா 900,000 தொகையான வாடகை வருமானம் நிலுவையாகக் காணப்பட்டதுடன் செலுத்தப்படாதிருந்த மின்சாரக் கட்டணம் ரூபா 464,056 ஆகக் காணப்பட்டது.

(உ) கொள்வனவு நடைமுறை வழிகாட்டி பின்பற்றப்படாது ரூபா 1,497,713 பெறுமதியான காரியாலய உபகரணங்களும் ரூபா 2,600,000 பெறுமதியான வாகனமொன்றும் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஊ) தேசிய ஒலிம்பிக் குழுவிற்குரித்தான 3,000 சதுர அடி அளவிலான முற்றாகக் குளிரூட்டப்பட்ட சக்தி விருத்தி பயிற்சி நிலையத்தின் வாகனத் தரிப்பிடமும், பாதுகாப்புச் சேவையுடன் மாதாந்தம் ரூபா 150,000 அல்லது மாதாந்த வருமானத்தின் 50 சதவீதம் எனும் இரண்டில் கூடிய பெறுமதிக்கு விலைக்கூறல்கள் கோரப்பட்டு நிறைவேற்றுக்குழுவின் அங்கீகாரமின்றி தேர்ந்தெடுக்கப்பட்ட குத்தகையாளருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும் குத்தகைக்காலம் 2008 நவம்பர் 10 ஆம் திகதி முதல் 2009 நவம்பர் 09 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குரியதாகக் காணப்பட்டதுடன் குறித்த உடன்படிக்கை 2009 மே 05 ஆம் திகதி வரை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. மேலும், உடன்படிக்கைக் காலம் நீடிக்கப்படாது குறித்த குத்தகையாளருக்கு தொடர்ந்தும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

### 3.2.2 கணக்காண்டு – 2010

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 16 ஆவது ஆசிய போட்டிகளின் போது விற்பனை நிகழ்ச்சித்திட்டத்திற்காக 30,000 அமெரிக்க டொலர்கள் (ரூபா 3,317,487) தொகை ஆசிய ஒலிம்பிக் குழுவின் மூலம் வழஙகப்பட்டிருந்ததுடன் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அவ்வாறே காணப்பட்டது.

(ஆ) ஆசியப் போட்டிகளுக்கு ஆயத்தமாகும் செயற்பாடுகளுக்காக ஒலிம்பிக் சகோதரத்துவத்தின் மூலம் டெனிஸ், கொல்ப் மற்றும் வேறு விளையாட்டுக்களுக்காக முறையே 20.545 ஐ.அ.டொலர்களும், 21,055 ஐ.அ.டொலர்களும் வழங்கப்படுவதற்கு உடன்பட்டிருந்ததுடன் ஆண்டின் போது இதில் 50,000 ஐ.அ.டொலர் ஒலிம்பிக் குழுவிற்கு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், ஒலிம்பிக் குழுவால் கொல்ப் சங்கத்திற்கும் டெனிஸ் சங்கத்திற்கும் முறையே ரூபா 1 மில்லியன் தொகையும் ரூபா 2.5 மில்லியன் தொகையும் வழங்கப்பட்டிருந்தன. ஏனைய விளையாட்டுக்களுக்காக வழங்கப்பட்டிருந்த நிதியத்தில் அவுஸ்திரேலியா பயிற்சியாளரின் கட்டணமும் Mental Toughness Training Programme இன் வேறு செலவினங்களுக்காக முறையே ரூபா 2,509,050 தொகையும் ரூபா 623,009 தொகையும் செலவிடப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. பயிற்றுவிப்பாளருடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தெற்காசியப் போட்டிகளுக்காக மாகாண சபைகளிலிருந்தும் தனியார் தரப்பினரிடமிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட முறையே ரூபா 3,497,545 தொகையும் ரூபா 451,856 தொகையும் பெறுவனவு கணக்கிற்குச் செலவு வைக்கப்படாது போட்டிக் கணக்கிற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2010 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான சந்தர்ப்பங்களில் ரூபா 23,441,373 தொகையான 10 கொடுக்கல் வாங்கல்களுக்குரித்தான செலவின விபரம், பற்றுச்சீட்டுக்கள், பட்டியல்கள், அங்கீகாரம் மற்றும் உடன்படிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் அம் மீதி திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தப்பட முடியாதிருந்தது.

(உ) பின்வரும் சட்டங்கள், விதிகள் முதலியவற்றிற்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (i) | 2004 பெப்ரவரி 24 ஆம் திகதிய 01/2004 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 6.1.1 ஆம் பந்தி | நிதியாண்டு பூர்த்தியடைந்து 60 நாட்களுக்குள் வருடாந்த வரைவு அறிக்கையொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2011 ஆம் ஆண்டிற்குரித்தான அறிக்கை 2012 ஆகஸ்ட் 30 ஆம் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 4.2.1 ஆம் வழிகாட்டல். | ஒலிம்பிக் குழுவால் 2010 ஆம் ஆண்டிற்காக கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஊ) ரூபா 51,723,086 கூட்டுத்தொகையான பெறுமதியான பொருட்களின் கொள்வனவின் போது கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 2.14.1 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) முறையே ரூபா 100,000 தொகையும் ரூபா 350,000 தொகையுமான கடன்அட்டைகள் 02 முறையான அங்கீகாரமின்றி தொடர்ந்து பேணப்பட்டிருந்தன இதற்காக 02 வங்கிக் கணக்குகளும் பேணப்பட்டிருந்ததுடன் இதற்காக 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட வேண்டிய மீதிகள் முறையே ரூபா 524,108 தொகையும் ரூபா 373,989 தொகையுமாகக் காணப்பட்டன.

(ஏ) 2010 பொது நலவாயப் போட்டிகளுக்காக அமைச்சின் மட்டத்தில் கலந்துகொண்ட உத்தியோகத்தர்களுக்காக ஏற்கப்பட்ட ரூபா 760,339 தொகையான செலவினத்தை அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 2010 ஆம் ஆண்டின் போது தேசிய ஒலிம்பிக் குழுவால் சில்லறைக் காசாக ரூபா 1,266,434 தொகை செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், சில்லறைக் காசுக் கட்டுநிதியின் எல்லை ஏற்கக்கூடிய செலவின வகை மற்றும் எல்லைகள் சில்லறைக் காசுக் கொடுப்பனவுகள் மற்றும் கட்டுநிதி தீர்க்கப்படுவதற்கான முறையொன்றும் சில்லறைக் காசேட்டுப் பதிவேடொன்றும் பேணப்பட்டிருக்கவில்லை.

(ஒ) விலைக் கோரல்களும் உடன்படிக்கையும் கைச்சாத்திடப்படாது ரூபா 2,103,000 பெறுமதியான 1,650 ரீ சேட்கள் 530 டரக் கிட்ஸ் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 04 சந்தர்ப்பங்களின் போது ஒப்பந்தப் பெறுமதியில் 20 சதவீதத்திற்கு மேலாக வழங்குனர்களுக்கு ரூபா 15,553,000 கூட்டுத்தொகையான முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஓ) 2011 ஆம் ஆண்டின் போது தேசிய ஒலிம்பிக் குழுவில் 15 ஊழியர்கள் கடமையாற்றியதுடன் அவர்களின் தனியாள் கோவைகள் முறையாகப் பேணப்பட்டிருந்தன.

**3.2.3 கணக்காண்டு 2011**

**------------------------------**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) தகவல் பரிமாற்ற முறைமையொன்று ஸ்தாபிக்கப்படுவதற்காக பாதிடப்பட்ட ரூபா 405,000 தொகை மூலதனமாக்கப்படாது மீண்டெழும் செலவினமாக பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) அமைச்சரவைத் தீர்மானத்தின் படி, தேசிய ஒலிம்பிக் குழுவின் தலைமைக் காரியாலயத்தின் நிர்மாணிப்பிற்காக 01 ரூட் 20 பேர்ச் காணியொன்று 2015 ஆம் ஆண்டின் போது ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் இது அறவிடப்பட்டு கணக்குகளிற்கு எடுக்கப்படுவதற்கு திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 18 இன் 73 ஆம் பந்தியின் பிரகாரம் முன்கொண்டுவரப்பட்ட மொத்தப் பெறுமதி மற்றும் திரண்ட

பெறுமானத்தேய்வு என்பன இறுதிக் கணக்குகளில் வெளிக்காட்டப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 10,557,059 கூட்டுத்தொகையான 12 கொடுக்கல் வாங்கல்கள் குறித்த செலவின விடயம், பற்றுச்சீட்டுக்கள், பட்டியல்கள் மற்றும் அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் அம் மீதிகள் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தப்பட முடியாதிருந்தன.

(உ) பின்வரும் சட்டங்கள், விதிகள் முதலியவற்றிற்கு இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (i) | தேசிய ஒலிம்பிக் குழுக் உறுப்புரையின் 13.3 ஆம் பந்தி | உறுப்புரையின் பிரகாரம் ஒரு வருடத்திற்கு 12 நிறைவேற்றுக் குழுக் கூட்டங்கள் கூட்டப்பட வேண்டிய போதிலும் தேசிய ஒலிம்பிக் குழுவால் 2011 ஆம் ஆண்டிற்குரித்தான 04 கூட்டங்கள் மாத்திரமே கூட்டப்பட்டிருந்தன. |
| (ii) | தேசிய ஒலிம்பிக் குழுக் உறுப்புரையின் 14.5 (ஆ) ஆம் பந்தி | உறுப்புரையின் பிரகாரம், தேசிய ஒலிம்பிக் குழுவின் பொறுப்பாளரால் வெளிநாட்டவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் வருமானச் செலவினக் கூற்றுக்களுக்குரித்தான பிரதியொன்று பேணப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 2010 செப்தெம்பர் 08 ஆம் திகதிய திருத்தப்பட்ட கொள்வனவு வழிகாட்டல் 18 இன் 5.4.4 ஆம் பந்தி | ஒப்பந்தம் ஆரம்பிக்கப்படுவதற்காக வழங்கப்படும் முற்பணத் தொகை ஒப்பந்தத் தொகையில் 20 சதவீதத்திற்கு மேற்படலாகாது. எவ்வாறெனினும், இதற்கு முரணாக நான்கு சந்தர்ப்பங்களின் போது எல்லை மீறப்பட்டு ரூபா 589,500 தொகையான முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. |
| (iv) | ஏப்ரல் 28 ஆம் திகதிய 431 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை | விமானப் பயணச்சீட்டுக்களின் மூலம் லங்கா நிறுவகத்திடமிருந்து அல்லது ஏனைய அரசாங்க நிறுவகங்களிடமிருந்து விமானப் பயணச்சீட்டு கொள்வனவு செய்யப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இதற்கு முரணாக தேசிய ஒலிம்பிக் குழுவால் ரூபா 1,741,876 பெறுமதியான விமானப் பயணச்சீட்டுக்கள் தனியார் நிறுவகங்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |

(ஊ) கொள்வனவு வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 3.2.2 (அ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது தேசிய ஒலிம்பிக் குழுவால் முன்னைய மூன்று உரிமையாளர்களால் 05 ஆண்டு காலமாகப் பயன்படுத்தப்பட்டிருந்த டொயோட்டா வேன் ரூபா 2,600,000 இற்கு 2008 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதன் கொள்வனவு விலை ஒலிம்பிக் நிறுவகத்திடம் காணப்பட்ட கரவன் வகையிலான வேன் தொழில்சார் மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டு அறிக்கை ஒன்று பெற்றுக்கொள்ளப்படாது ரூபா 1,400,000 இற்கு உரிமை மாற்றப்பட்டு போதிய நிதி சேமிப்புக் கணக்கில் இருக்கையில் எஞ்சிய ரூபா 1,200,000 இற்காக குத்தகை நிதி வசதிகள் பெற்றுக்கொண்டதன் மூலம் தீர்க்கப்பட்டிருந்தது. மேற்குறித்த வாகனத்தை கொள்வனவு செய்வதற்காக குத்தகை வசதிகள் பெற்றுக்கொள்ளப்பட்டதன் காரணமாக தேசிய ஒலிம்பிக் குழு ரூபா 455,113 தொகையான வட்டிச் செலவினத்தை ஏற்க நேர்ந்திருந்தது.

(V) 2009 நவம்பர் 01 ஆம் திகதி முதல் செயற்படும் வகையில் தேசிய ஒலிம்பிக் குழுவின் சிற்றுண்டிச்சாலை 05 ஆண்டுகாலமாக முதலாம் ஆண்டிற்காக மாதாந்த குத்தகை வாடகையாக ரூபா 300,000 தொகையும் இதனையடுத்து தவணைப்பணத்தை வருடாந்தம் ரூபா 30,000 படி அதிகரிக்கும் வகையில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. பின்னர் ஒலிம்பிக் குழுவால் மேற்குறித்த உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டு நவம்பர் 01 ஆம் திகதி முதல் செயற்படும் வகையில் புதிய ஓர் உடன்படிக்கை வேறு தரப்பினருடன் முதலாம் ஆண்டிற்காக மாதாந்த குத்தகைப்பணம் ரூபா 300,000 படியும் இதனையடுத்து தவணைப்பணம் வருடாந்தம் ரூபா 15,000 ஆல் அதிகரிக்கும் வகையில் புதிய ஓர் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த காரணத்தால் உடன்படிக்கைக் காலத்திற்குரித்தான ரூபா 2,700,000 தொகையான மதிப்பிடப்பட்ட வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் போது சர்வதேச ஒலிம்பிக் குழுவிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 1,350,000 தொகையான நிதியம் குறித்த விளையாட்டுக் கழகத்திற்கு வழங்கப்படாது ஒலிம்பிக் குழுவால் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஐ) நிறைவேற்றுக் குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாது ஒலிம்பிக் குழுவின் 16 ஊழியர்களுக்கு ரூபா 680,984 தொகையான ஊக்குவிப்புப் பணம் செலுத்தப்பட்டிருந்தது.

### 3.3 இலங்கை காற்பந்து சங்கம்

#### 3.3.1 கணக்காண்டு – 2009

2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 403,789,846 தொகையான 10 கொடுக்கல் வாங்கல்களுக்குரித்தான இருப்புப் பதிவேடு, பௌதீக மெய்மையாய்வு அறிக்கை, விலைக் கூறல் விபரங்கள், அங்கீகாரம் மற்றும் நிலையான சொத்துப் பதிவேடு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் அம் மீதிகளை திருப்திகரமான முறையில் சான்றுறுதிப்படுத்தப்பட முடியாதிருந்தன.

### 3.3.2 கணக்காண்டு - 2010

(அ) சம்மேளனத்திடமுள்ள முதலீடுகளுக்குரித்தான முதலீட்டு வருமானத்தில் மீளாய்வாண்டிற்கும் கடந்த ஆண்டுகளுக்குமான புரள்வு வரி ரூபா 1,097,620 தொகையால் கழிக்கப்பட்டு குறித்த நிதி நிறுவகத்தால் உள்நாட்டு வருமான வரித் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்ததுடன் அத் தொகை மீள அளவிடப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 231,451,701 கூட்டுத்தொகையான 10 கொடுக்கல் வாங்கல்களுக்குரித்தான இருப்புப் பதிவேடு, பொருள் பெறுவனவுப் பத்திரம், பற்றுச்சீட்டுக்கள், பொருட் பகிர்வு விபரம், விலைக்கூறல் விபரம் மற்றும் நிலையான சொத்துப் பதிவேடு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் அம் மீதிகளைத் திருப்திகரமான முறையில் சான்றுறுதிப்படுத்தப்பட முடியாதிருந்தது.

(இ) இலங்கை காற்பந்து சம்மேளனத்தின் சிற்றுண்டிச்சாலை 2007 ஆம் ஆண்டு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் கேள்வி கோரப்படாது அந்த விலைக்கே ஆண்டு தோறும் வாடகைக் காலம் நீடிக்கப்பட்டு வழங்கப்பட்டிருந்தன.

(ஈ) கொள்வனவு நடைமுறை வழிகாட்டிக் கோவை பின்பற்றப்படாது மீளாய்வாண்டின் போது 27 போட்டிகளுக்காக தங்குமிட, உணவு, போக்குவரத்துச் செலவினங்கள், விளையாட்டு உடைகள் மற்றும் விமானப் பயணச்சீட்டுக்கள் ஆகியனவும் 07 இளைஞர் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ரூபா 48,141,933 பெறுமதியான பொருட்களும் சேவைகளும் வழங்குவதற்காக வழங்குனர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர்.

(உ) ரூபா 4,719,000 பெறுமதியான 02 ஒப்பந்தங்கள், கொள்வனவு நடைமுறை வழிகாட்டிக் கோவை பின்பற்றப்படாது ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

(ஊ) சர்வதேச காற்பந்து சம்மேளனத்தினூடாக இலங்கை காற்பந்து சம்மேளனத்திற்கு வழங்கப்பட்டிருந்த நிதி சர்வதேச காற்பந்து சம்மேளனத்தின் இலங்கைக் கிளையினாலேயே முகாமைத்துவம் செய்யப்பட்டிருந்தது. இக் கிளையின் நிதியத்தைப் பயன்படுத்தி செயற்படுத்தப்பட்டு பூர்த்திசெய்யப்பட்ட சில செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் போது இலங்கை காற்பந்து சம்மேளனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் பெறுமதி ரூபா 25,850,000 ஆகக் காணப்பட்டன. எவ்வாறெனினும், செயற்திட்டத்திற்குரித்தான ஆவணங்கள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3.3 கணக்காண்டு – 2011

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,323,336 கூட்டுத்தொகையான 04 கொடுக்கல் வாங்கல்கள் குறித்த விலைக்கூறல் விபரம், பொருட் பெறுவனவு மற்றும் பகிர்ந்தளிப்பு விபரங்கள் கணக்காய்விற்குச்

சமர்ப்பிக்கப்பட்டிராமையால் அம் மீதி திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தப்பட முடியாதிருந்தன.

(ஆ) 27 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணத்தில் எஞ்சிய முற்பணத்தொகையான ரூபா 1,483,820 எதிர்பார்க்கப்பட்ட பணி பூர்த்தியடைந்ததன் பின்னர் குறித்த உத்தியோகத்தரால் கையில் வைத்துக்கொள்ளப்பட்டு 36 நாட்கள் முதல் 100 நாட்கள் வரையான காலதாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தன.

(இ) விளையாட்டு அணிகலன்களைக் கொள்வனவு செய்வதற்காக தனியார் நிறுவனம் ஒன்றிற்கு முற்பணமாக ரூபா 355,950 தொகை அதாவது ஒப்பந்தப் பெறுமதியில் 70 சதவீதமான அளவு 2011 யூன் 30 ஆம் திகதி செலுத்தப்பட்டிருந்த போதிலும் குறித்த அணிகலன்கள் காற்பந்து சம்மேளனத்திற்கு 2012 பெப்ரவரி வரையிலும் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை காற்பந்து சம்மேளனத்தின் சிற்றுண்டிச்சாலை விலைகூறலின்றி ரூபா 45,000 தொகையான மாதாந்த வாடகைக்கு ஒரு வருட காலத்திற்காக 2006 ஆம் ஆண்டின் போது வாடகைக்கு வழங்கப்பட்டு ஆண்டு தோறும் அதே தொகைக்கு ஒப்பந்தம் நீடிக்கப்பட்டிருந்தது. சிற்றுண்டிச்சாலைக்காக வேறான மின் மானியும் நீர் மானியும் பொருத்தப்பட்டிராததுடன் 2011 ஆம் ஆண்டின் (அலுவலகமும் உள்ளடங்கலாக) சராசரி மாதாந்த மின்சார மற்றும் நீர் பட்டியல் கட்டணம் முறையே ரூபா 190,286 தொகையாகவும் ரூபா 16,584 தொகையாகவும் காணப்பட்டன.

(உ) மீளாய்வாண்டின் பதவியணிக்காக கடன் உத்தேசத்திட்டமொன்று பின்பற்றப்பட்டிராததுடன் விளையாட்டு வீரருக்கும் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட ஓர் ஊழியருக்கு முறையே ரூபா 470,000 தொகையும் ரூபா 15,000 தொகையுமான கடன் வழங்கப்பட்டிருந்தது. எனினும், குறித்த தரப்பினரின் கடன்தொகையை அறவிடுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாது புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2011 ஆம் ஆண்டின் போது ஈரானில் நடைபெற்ற AFC-U-13 ஆடவர் போட்டிக்கு 05 உத்தியோகத்தர்கள் விளையாட்டு அமைச்சின் அங்கீகாரமின்றி பங்கேற்கச் செய்யப்பட்டிருந்தனர்.

(எ) குறித்த காலத்தில் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிராத காரணத்தால் காலாவதியான ரூபா 157,063 தொகையான 341 காற்பந்துகள் புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தன.

### 3.4.1 இலங்கை ரக்பி காற்பந்து கழகம்

### 3.4.1 கணக்காண்டு – 2010

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சர்வதேச ரக்பி கழகத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 60,000 தொகை ஆண்டின் போது கணக்குகளுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒரு வருடத்திற்கு மேலான காலத்திலிருந்து நிலவிவரும் ரூபா 4,115,733 தொகையான கடன்பட்டோர் மீதியை அறிவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,551,814 கூட்டுத்தொகையான 04 கொடுக்கல்வாங்கல்களுக்குரித்தான இருப்புப் பதிவேடு மற்றும் பௌதீக மெய்மையாய்வு அறிக்கைகள், பற்றுச்சீட்டுக்கள், பொருள் விநியோக விபரம் மற்றும் நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் பௌதீக மெய்மையாய்வு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் அம் மீதி திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தப்பட முடியாதிருந்தது.

**3.4.2 கணக்காண்டு – 2011**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குறும் ரக்பி களியாட்டங்களுக்காக உணவு வழங்குவதற்காக வெளித்தரப்பினருக்கு ரூபா 910,612 தொகை செலுத்தப்பட்டிருந்தது. பின்னர் குறும் ரக்பி களியாட்டங்களின் உள்ளபடியான செலவினம் மதிப்பீட்டுத் தொகையை மிகைப்பதனைத் தடுப்பதற்காக குறும் ரக்பி களியாட்டச் செலவினங்கள் நாட்குறிப்புப் பதிவின் மூலம் அபிவிருத்திச் செலவினத்தின் கீழ் மாற்றப்பட்டிருந்தது.

(ஆ) கீழே காண்பிக்கப்பட்டுள்ள பெறவேண்டிய மீதியை அறவிடுவதற்காக ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(i) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து பெறவேண்டிய ரூபா 1,173,560 தொகையான புரள்வு வரித் தொகை.

(ii) சர்வதேச ரக்பி கழகத்திடமிருந்து 2009 முதல் பெறவேண்டிய ரூபா 7,586,000 தொகை

(iii) 2011 மே முதல் செப்தெம்பர் வரையான காலப்பகுதியின் போது பிராந்திய ரக்பி சங்கத்திடமிருந்து பெறவேண்டிய ரூபா 300,050 கூட்டுத்தொகையான முற்பணத் தொகை.

(iv) ஏனைய கடன்பட்டோரின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள 01 முதல் 04 வரையான காலப்பகுதிக்கிடையில் பழைமை வாய்ந்த ரூபா 22,348,013 தொகையான நிலுவை மீதி.

(இ) 2010 ஆம் ஆண்டு முதல் உருஹுணு ரக்பி சங்கத்திடமிருந்து பெறவேண்டிய ரூபா 140,000 தொகை நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டிய மீதியின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் போது இம் மீதி அபிவிருத்திச் செலவினங்களிற்கு மாற்றப்பட்டிருந்தன.

(ஈ) போட்டி விலைக் கோரல்களின்றி ரூபா 681,302 பெறுமதியான பொருட்களும் சேவைகளும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.

(உ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 47,721,166 தொகையான 04 கொடுக்கல் வாங்கல்களுக்குரிய விலைக் கோரல்கள், மீதிகளின் உறுதிப்படுத்தற் கடிதங்கள், அங்கீகாரம், மதிப்பீடு மற்றும் இருப்புப் பெறுவனவு, வழங்கல் தொடர்பான விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் அம் மீதி திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தப்பட முடியாதிருந்தது.

(ஊ) முறையே ரூபா 231,630 தொகையும் ரூபா 924,890 தொகையுமான அலுவலக உபகரணமும் விளையாட்டு உபகரண இருப்புகளும் போட்டி விலை கோரப்படாது கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(எ) 2008 ஏப்ரல் 28 ஆம் திகதிய 431 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைக்கு முரணாக ரூபா 1,008,392 பெறுமதியான விமானப் பயணச்சீட்டுக்கள் தனியார் நிறுவகமொன்றிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஏ) ரூபா 177,723 கிரயமான கணனி மென்பொருள் பொதிகள் வெளிநபரொருவரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அத் தொகுதி பயன்படுத்தப்படுவதற்காக மடிக் கணனி ஒன்றும் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இதற்காக போட்டி விலைக் கோரல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஐ) ரக்பி கழகத்திற்கு எதிராக நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த வழக்கொன்றிற்குரித்தான சட்டச் செலவினங்களுக்காக ரூபா 518,124 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் கழகத்தால் அவ் வழக்குத் தொடர்பான விபரம் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஒ) வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு பயிற்றுவிப்பாளர்களுக்கு ரூபா 1,527,875 தொகை கட்டணமாகச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அவர்களின் நியமனக் கடிதமும் அவர்களுடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகளும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 இலங்கை மெய்வல்லுனர் விளையாட்டுக் கழகம் - கணக்காண்டு 2012

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டிற்குரித்தான பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 ஆம் ஆண்டின் போது ஆதன இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்படுவதற்கான காரணம் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4,446,424 தொகையான விளையாட்டுப் பொருட்களும் ரூபா 1,690,071 தொகையான அளவீட்டு உபகரண இருப்பும் மீண்டெழும் செலவினத்தின் கீழ் பதிவழிக்கப்பட்டிருந்தது.

(உ) மூன்று வருடங்களாக நிலவிவரும் ரூபா 09 மில்லியன் தொகையான நடைமுறைக் கணக்குகளின் மீதி இவ்வாண்டின் போதும் ஆக்கபூர்வமான முதலீட்டில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கடந்த சில ஆண்டுகளாக நிலவிவரும் ரூபா 429,016 கூட்டுத்தொகையான முற்பணங்கள் 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 இலங்கை கூடைப்பந்து சங்கம் - 2012 - ஆம் கணக்காண்டு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சங்கத்திற்கும் பயிற்றுவிப்பாளருக்கும் இடையே ஓர் உடன்படிக்கை இன்றி சங்கத்தால் வெளிநாட்டுப் பயிற்றுவிப்பாளரின் செலவினத்திற்காக ரூபா 412,923 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) 12 ஆவது தெற்காசிய போட்டிகளுக்கு தகைமை பெற்ற பயிற்சிக் குழாமின் வீர வீராங்கனைகளின் பயிற்சிகளுக்குத் தேவையான விளையயாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படுவதற்காக விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தால் சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 300,000 தொகை திணைக்களத்தின் அங்கீகாரமின்றி வெளிநாட்டுப் பயிற்றுவிப்பாளர்களின் செலவினங்களுக்காகச் செலவிடப்பட்டிருந்தது.

**3.7 பயிலுனர் படகோட்டற் சங்கம் - கணக்காண்டு - 2011**

சங்கத்திற்குரித்தான 103 பயிலுனர் படகுகளும் 16 வள்ளங்களும் கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிராததுடன் 2012 ஆம் ஆண்டின் போது 16 வள்ளங்களும் திருத்தம் செய்வதற்காக ரூபா 823,275 தொகை செலவிடப்பட்டிருந்தன.

**3.8 பயிலுனர் படகோட்டற் சங்கம் - கணக்காண்டு 2012**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சங்கத்தால் நிலையான சொத்துக்கள் தொடர்பில் முறையான பதிவேடொன்று பேணப்பட்டிராத காரணத்தால் ரூபா 18,968,844 தொகையான ஆதனங்கள், இயந்திர உபகரணங்களின் பெறுமதி கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தன.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் பிரகாரம் ஊழியர் பணிக்கொடைக்கான ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) சங்கத்தால் 1958 ஆம் ஆண்டின் போது 25 ஆண்டுகளுக்காக குத்தகை அடிப்படையில் கொழும்பு மாநகர சபையால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த காணிக்குரித்தான குத்தகை உடன்படிக்கை 1983 செப்தெம்பர் 30 ஆம் திகதி முடிவுற்றிருந்த போதிலும் குறித்த உடன்படிக்கை புதுப்பிக்கப்படுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ரூபா 13,995,200 தொகையான குத்தகை தவணைப்பணத்திற்காக ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிராத காரணத்தால் அத் திகதியில் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட இருப்பின் பெறுமதி தொடர்பாக கணக்காய்வின் போது திருப்தியடைய முடியாதிருந்தது.

**3.9 பாரம் தூக்கும் சங்கம் கணக்காண்டு – 2012**

பாரம் தூக்கும் உபகரணங்களின் கொள்வனவிற்காக விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தால் சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,500,000 தொகையில் ரூபா 1,411,200 தொகை செலவில் விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் எஞ்சிய ரூபா 88,800 தொகை விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்திடம் மீள வழங்கப்பட்டிருக்கவில்லை.

**3.10 பிலியட் மற்றும் ஸ்னுகர் சங்கம் - கணக்காண்டு 2012**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2009 ஆம் ஆண்டின் போது ஆதன இயந்திர மற்றும் உபகரணங்கள் மீள்மதிப்பிடப்பட்டிருந்ததுடன் அவ் அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் மீள்மதிப்பீட்டு நடைமுறைகளினதும் கணக்கீடுகளினதும் சரியான தன்மை குறித்தும் பரிபூரணத்துவம் தொடர்பாகவும் கணக்காய்வின் போது திருப்திகொள்ள முடியாதிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது ஆதன இயந்திர மற்றும் உபகரணங்கள் தொடர்பாக பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிராமையால் அவற்றின் பௌதீக உள்ளபடிநிலை தொடர்பாக கணக்காய்வின் போது உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(இ) சங்கத்தால் சொத்துக்கள் கிடைக்கப்பெற்ற திகதியோ அல்லது சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட திகதியுடன் நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிராத காரணத்தால் பெறுமானத்தேய்விற்கான ஏற்பாட்டின் சரியான தன்மை குறித்தும் பரிபூரணத்துவம் தொடர்பாகவும் கணக்காய்வின் போது திருப்திகொள்ள முடியாதிருந்தது.

**3.11 தேசிய ரையில் சங்கம் - கணக்காண்டு – 2012**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டின் நிலையான சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்விற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 4,369,317 பெறுமதியான நிலையான சொத்துக்களுக்காக நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(இ) 02 ஆண்டுகள் கடந்த ரூபா 434,289 தொகையான கடன்பட்டோர் மீதிகளுக்காக ஐயக்கடன் மற்றும் அறவிடமுடியாக் கடனுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 03 ஆண்டுகள் கடந்த ரூபா 728,341 தொகையான கடன்கொடுத்தோர் மீதிகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,399,634 கூட்டுத்தொகையான 04 கொடுக்கல் வாங்கல்களுக்குரித்தான இருப்பு மெய்மையாய்வு அறிக்கைகள் இருப்புப் பேரேடு மற்றும் மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் அம் மீதிகள் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தப்பட முடியாதிருந்தது.

## 3.12 இலங்கை குதிரை ஓட்டச் சங்கம் - கணக்காண்டு 2011

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஸ்கவுட் கட்டணமாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 90,000 தொகையான பணம் ரூபா 20,000 தொகையாகப் பேரேட்டில் பதிவுசெய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் ஏப்ரல் முதல் திசெம்பர் வரை வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,558,296 கூட்டுத்தொகையான 04 கொடுக்கல் வாங்கல்களுக்குரித்தான குதிரைகள் இறந்திருந்தமையை உறுதிப்படுத்துவதற்குரித்தான ஆவணங்கள், அன்பளிப்புச் செய்யப்பட்டமைக்கான அங்கீகாரம் மற்றும் மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் அம் மீதிகள் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தப்பட முடியாதிருந்தது.

(ஈ) சங்கத்தால் 2012 ஆம் ஆண்டிற்கான பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.13 இலங்கை கிரிகட் - கணக்காண்டு 2012

(அ) கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களின் 2.5.1.2 ஆம் குறிப்பின் படி, வருமானக் கூற்றில் போட்டிகளின் வருமானத்தை இனங்காணும் கொள்கை அப் போட்டி முடிவுறும் காலப்பகுதிக்குரித்தானதாகும். எவ்வாறெனினும், இலங்கை கிரிக்கட்டினால் அதற்கு முரணாக, முன்னைய ஆண்டுகளின் ரூபா 46,017,086 கூட்டுத்தொகையான இலங்கை கிரிக்கட் போட்டிகளினாலான நட்டம் மீளாய்வாண்டின் வருமானத்திற்குப் பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) இலங்கை கிரிக்கட் அதன் ஆரம்பம் முதல் நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணியிராததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலையான சொத்துக் கிரயம் ரூபா 8,985,468,081 ஆகக் காணப்பட்டது. மேலும் முகாமைத்துவத்தால் தற்போதும் பயன்படுத்தப்படும் முற்றாகப் பெறுமானத்தேய்விடப்பட்ட நிலையான சொத்துக்கள் மீள்பெறுமதியிடப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 4,282,971,011 தொகையும் ரூபா 1,243,418,241 தொகையும் ரூபா 1,657,258,697 தொகையுமான முறையே புதிதாக நிர்மாணிக்கப்படும் சூரியவெவ கிரிக்கட் விளையாட்டு மைதானத்தின் பெறுமதி, பல்லேகலே விளையாட்டு மைதானத்தின் நவீனமயமாக்கல் கிரயம், ஆர். பிரேமதாஸ விளையாட்டு மைதானத்தின் குத்தகைக்கு வழங்கியதன் மூலமான பெறுமதி மற்றும் 2012 ஆம் ஆண்டின் போது ஏற்கப்பட்ட ரூபா 2,774,076 தொகையும் ரூபா 4,793,215 தொகையும் ரூபா 54,686,368 தொகையுமான முறையே சூரியவெவ, பல்லேகலே, ஆர். பிரேமதாஸ விளையாட்டு மைதானத்தின் குத்தகைக்கு வழங்கியதன் மூலமான கிரிகட் மைதானங்களின் மேலதிக வேலைகளுக்காக ஏற்கப்பட்ட கிரயம் மூலதனமாக்கப்பட்டிருந்த போதிலும் 2011 ஆம் 2012 ஆம் ஆண்டுகளுக்காக கணக்குகளில் பெறுமானத்தேய்விற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) 2009 ஆம் ஆண்டு முதல் கணக்குகளில் காண்பிக்கப்பட்ட ரூபா 33,804,033 தொகையும் ரூபா 1,347,789 தொகையுமான வெலகெதர கிரிகட் மைதானம் மற்றும் மொறட்டுவை கிரிகட் மையாதானத்தின் நடைபெற்றுக்கொண்டிருக்கும் மூலதன வேலை தீர்க்கப்படாத நிலையில் காணப்பட்டன.

(iv) பல்லேகலே கிரிகட் மைதானத்தினதும், ஆர். பிரேமதாஸ கிரிகட் மைதானத்தினதும் காலி கிரிகட் மைதானத்தினதும் நிர்மாணப் பணிகள் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் இதற்காக ஏற்கப்பட்ட ரூபா 16,027,367 தொகையான கிரயம் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அத் தொகையில் ரூபா 4,920,510 தொகையான பணம் நிர்மாணிப்பு முற்பணமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(v) இலங்கை கிரிகட்டால் 2011 ஏப்ரல் மாதத்தின் போது மின்பிறப்பாக்கி இயந்திரமொன்று வாடகைக்குப் பெற்றுக்கொள்ளப்படுவதற்காக இலங்கை மின்சார சபைக்கு ரூபா 72,066,353 தொகை செலுத்தப்பட வேண்டியதாகக் காணப்பட்டது. அப் பெறுமதியிலான இரண்டு மின்பிறப்பாக்கி இயந்திரங்கள் மீள ஒப்படைக்கப்பட்டமையால் ஏற்பட்ட நிலுவை மீதியான ரூபா 61,790,680 தொகை இலங்கை கிரிகட் மூலம் தீர்க்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், மின்பிறப்பாக்கி இயந்திரத்தின் பெறுமதி இலங்கை கிரிகட்டால் கணக்குப் புத்தகங்களிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

(vi) கடன் அட்டைகளின் மூலம் தீர்க்கப்பட்டிருந்த ரூபா 364,153 தொகையான சொந்தச் செலவினம் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படுவதற்குப் பதிலாக தவறாக வருமானத்திலிருந்து பதிவளிக்கப்பட்டிருந்தது.

(vii) மீளாய்வாண்டின் போது நடைபெற்ற இங்கிலாந்து இலங்கை கிரிகட் சுற்றுலாவின் போது காலி கிரிகட் சங்கத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய நுழைவுச் சீட்டு விற்பனை வருமானத் தொகையான ரூபா

702,525 இலங்கை கிரிகட்டினால் கணக்குகளிற்குக் கொண்டுவரப்பட்டிராததுடன் நிலுவை மீதியை அறவிட்டுக்கொள்வதற்கு 2013 பெப்ரவரி 20 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) வருமானக் கூற்றில் காண்பிக்கப்பட்ட வருமானத்திற்கும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிக்காக வெளிப்படுத்தப்பட்ட வருமானத்திற்கும் இடையே ஓர் வேறுபாடு நிலவியமை கண்டறியப்பட்டது.

(ii) போட்டி முற்பணப் பேரேட்டு மீதி மற்றும் பட்டோலை மீதிக்கு இடையே ரூபா 452,785 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஈ) தொங்கல் கணக்குகள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தொங்கல் கணக்கு மீதி ரூபா 286,193 ஆகக் காணப்பட்டது. எவ்வாறெனினும், இம் மீதி ரூபா 4,185,008 தொகையான இனங்காணப்படாத வரவு வைத்தல்கள் மற்றும் ரூபா 4,471,201 தொகையான இனங்காணப்படாத செலவு வைத்தல்களின் பின்னரே ஏற்பட்டிருந்தது.

(உ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன

(i) வெளியீட்டு வரிகளுக்கு எதிராகக் கழிக்கப்பட முடியாத உள்ளீட்டு வரியில் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி செலுத்தப்பட்டதன் காரணமாக பெறவேண்டியதாக எதிர்வரும் ஆண்டுகளுக்காக முன்கொண்டு வர முடியாதிருந்தது. ஆகையால் நிதிக்கூற்றுக்களில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டியதாகக் காண்பிக்கப்பட்ட ரூபா 3,454,092 தொகையான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி அறவிடப்படும் இயலுமை சந்தேகத்திற்கிடமானதாகக் காணப்பட்டது.

(ii) 1984 இன் 37 ஆம் இலக்க வினோத வரி (திருத்தப்பட்டது) அதிகாரச்சட்டத்தின் 06 ஆம் பிரிவின் பிரகாரம், விற்பனை செய்யப்படாத நுழைவுச் சீட்டுக்களுக்காகச் செலுத்தப்பட்ட வினோத வரி, போட்டிகள் நடாத்தப்பட்டு 30 நாட்களுக்குள் அறவிடப்பட வேண்டும். எவ்வாறெனினும், விற்பனை செய்யப்பட்டிராத நுழைவுச் சீட்டுக்களிற்கு உள்ளூராட்சி நிறுவகங்களுக்குச் செலுத்தப்பட்ட வினோத வரித் தொகையான ரூபா 13,152,146 இற்குரித்தான கோரல்கள் குறித்த காலப்பகுதியில் சமர்ப்பிக்கப்பட்டிராத காரணத்தால் அறவீடுகள் சந்தேகத்திற்கிடமாகக் காணப்பட்டன.

(iii) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 25,624,201 தொகையான மொத்த நிலுவை நிர்மாண முற்பணத்தொகையில் ரூபா 19,401,697 ஒரு வருடத்திற்கு மேலான நிலுவை முற்பணத்தொகையான நிலவியது. எவ்வாறெனினும், இம் முற்பணத்தைத் தீர்த்துக்கொள்வதற்கு இலங்கை கிரிகட் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iv) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவைப் போட்டி முற்பணம் மற்றும் ஏனைய முற்பணத்தொகை ரூபா 46,945,084 தொகையாலும் ரூபா 11,888,139 தொகையாலும் ஒரு வருடத்திற்கு மேலான நிலுவை முற்பணங்கள் முறையே ரூபா 42,861,949 தொகையாகவும் ரூபா 8,352,209 தொகையாகவும் காணப்பட்டன. எவ்வாறெனினும், நிலுவை முற்பணத்தொகையை அறவிட்டுக்கொள்வதற்கு இலங்கை கிரிகட் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(v) கூட்டுத்தொகை ரூபா 3,071,704 தொகையான வேறு கடன்பட்டோர் ஒரு வருடம் முதல் நான்கு வருடங்கள் வரையான காலமாக நிலுவையாகக் காணப்பட்ட போதிலும் நிலுவைக் கடனை அறவிடுவதற்கு இலங்கை கிரிகட் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(vi) வெளிநாட்டு கிரிகட் கட்டுப்பாட்டுச் சபையாலும் அனுசரணைப் பணத்தில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய மீதி முறையே ரூபா 20,481,888 தொகையாகவும் ரூபா 39,016,026 தொகையாகவும் இருந்த போதிலும் ஒரு வருடம் முதல் நான்கு வருட காலமாக நிலுவையாகக் காணப்பட்ட மீதி முறையே ரூபா 19,362,587 தொகையாகவும் ரூபா 13,167,589 தொகையாகவும் காணப்பட்டது.

(vii) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு விளையாட்டு வீரர்களுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 23,353,656 தொகையான போட்டிக் கட்டணங்களில் மூன்று ஆண்டுகளிலிருந்து ஐந்து ஆண்டுகள் வரையான காலமாக விளைவற்றுக் காணப்பட்ட கட்டணங்களின் அளவு ரூபா 403,628 ஆகக் காணப்பட்டது. எவ்வாறெனினும், 2013 மார்ச் 31 வரை அம் மீதியைத் தீர்ப்பதற்கோ அல்லது தெளிவாக்குவதற்கு இலங்கை கிரிகட் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(viii) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 65,650,372 தொகையான செலுத்தப்பட வேண்டிய மொத்த வியாபார மீதிகளில் ஒரு வருடம் முதல் நான்கு வருட காலமாக நிலுவையாகக் காணப்பட்ட மீதி ரூபா 56,862,411 தொகையாகக் காணப்பட்டது.

(ix) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 33,873,499 தொகையான செலுத்தப்பட வேண்டிய மொத்த அனுசரணைத் தொகையில் ஒரு வருடம் முதல் ஐந்து வருடங்கள் வரையான காலமாக விளைவற்றுக் காணப்பட்ட மீதி ரூபா 1,319,018 ஆகக் காணப்பட்டது.

(x) பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்களின் 2011 ஒக்டோபர் 17 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் சுகததாஸ தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகாரசபைக்குச் செலுத்தப்பட வேண்டிய தொகை ரூபா 25,753,845 ஆகக் காணப்பட்டது. எவ்வாறெனினும், அத் தொகை கணக்குகளுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(xi) இலங்கை கிரிகட்டிற்குச் செலுத்தப்பட வேண்டிய பணம் குறித்த தரப்பினரிடமிருந்து அறவிடப்படுவதற்கு போதிய நடவடிக்கை எடுக்கப்படாது ரூபா 74,901,760 தொகை மற்றும் ரூபா 242,465,738 தொகையுமான பெறவேண்டிய பணம் நிறைவேற்றுக் குழுவின் பரிந்துரையில் 2011 ஆம் 2012 ஆம் ஆண்டுகளின் போது ஐயக்கடனாகப் பதிவழிக்கப்பட்டிருந்தது.

**(ஊ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 சந்தர்ப்பங்களிற்குரித்தான ரூபா 20,188,735,106 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களுக்காக நிலையான சொத்துப் பதிவேடு, சொத்துக்கள் பௌதீக மெய்மையாய்வு அறிக்கை, விபரமான பட்டோலைகள் மற்றும் மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் அம் மீதி திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தப்பட முடியாதிருந்தது.

**(எ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

மீளாய்வாண்டின் போது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிராணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (i) | 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச்சட்டத்தின் 23 ஆம் பிரிவு | இலங்கை கிரிக்கட்டினால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாது பெறுமதி சேர் வரி அட்டுறு அடிப்படைக்குப் பதிலாக காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ii) | 1985 இன் 01 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியம் (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தின் 9(2) ஆம் பிரிவு மற்றும் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிய அதிகாரச்சட்டத்தின் 17(1) ஆம் பிரிவு | அதிகாரச்சட்டங்களில் காண்பிக்கப்பட்டுள்ள மொத்த உழைப்பிற்குப் பதிலாக ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தின் அடிப்படையில் இலங்கை கிரிகட்டால் ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்பும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்புத் தொகையும் கணிப்பிடப்பட்டிருந்தது. |
| (iii) | 2006 சனவரி 25 ஆம் திகதிய என்பீஏ 08 ஆம் இலக்க தேசிய கொள்வனவு முகவரகத்தின் | மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட கொள்வனவிற்காக இலங்கை கிரிக்கடடினால் கொள்வனவு வழிகாட்டல் |

| | |
|---|---|
| சுற்றறிக்கை – அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் | பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |

**(ஏ) போதிய அதிகாரத்தால் சான்றுறுதிப்படுத்தப்பட்டிராத கொடுக்கல்வாங்கல்கள்**

சில்லறை காசுக் கட்டுநிதி எல்லைகள் நிர்ணயிக்கப்படாமலும் அங்கீகாரமின்றியும் பல்வேறு தரப்பினருக்கு ரூபா 5,000 முதல் ரூபா 250,000 வரையான சில்லறைக் காசு முற்பணம் இலங்கை கிரிகட்டினால் வழங்கப்பட்டிருந்தது. மேலும், முற்பணப் பதிவேடொன்று பேணப்பட்டிராத காரணத்தால் முற்பணம் தீர்க்கப்படுவது தொடர்பாக கணக்காய்வின் போது பரீட்சிக்கப்பட முடியாதிருந்தது.

**(ஐ) தேசிய அணிக்கு ஆடைகள் வழங்கும் அனுசரணையாளர் ஒப்பந்த வருமானம் - 2009 முதல் 2012 ஆம் ஆண்டுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2009 ஏப்ரல் 30 ஆம் திகதி இலங்கை கிரிகட்டினால் தேசியஅணி மற்றும் ஆடை அனுசரணையாளருடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கையின் 4.1 ஆம் பிரிவின் படி, குறித்த தினங்களில் அரசிறைக் கட்டணம் (Royalty Fees) சேகரித்துக் கொள்ளப்படுவதற்கு இலங்கை கிரிக்கட் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன் விளைவாக அனுசரணையாளரால் ரூபா 7,403,500 தொகையும் ரூபா 9,328,750 தொகையும் கொடுப்பனவு செய்யப்படுவது முறையே 23 நாட்களாலும் 60 நாட்களாலும் தாமதமாகியிருந்தன.

(ii) மேற்குறித்த உடன்படிக்கையின் 4.2 ஆம் பிரிவின் படி, அனுசரணையாளரால் மாதிரி ஆடை விற்பனைகளில் (Replica Clothing Sales) 15 சதவீதம் காலாண்டு முடிவுற்றதைத் தொடர்ந்து 14 நாட்களுக்குள் கொடுப்பனவு செய்யப்படுவது கட்டாயமாகும். எவ்வாறெனினும், 2009 யூன் 30 ஆம் திகதி முதல் 2011 யூன் 30 வரையான காலப்பகுதிக்குரித்தான பட்டியல் 2011 செப்தெம்பர் 23 ஆம் திகதியே வழங்கப்பட்டிருந்தன. இதன் படி, ரூபா 4,179,158 தொகையான பெறவேண்டிய பணம் தொகை 286 நாள் முதல் 1016 நாட்கள் வரையான தாமதங்களுடன் அனுசரணையாளரால் தீர்க்கப்பட்டிருந்தது. மேலும் இலங்கை கிரிகட்டால் 2011 இன் இறுதிக் காலாண்டுகள் இரண்டிற்காகவும் 2012 இன் முதல் காலாண்டிற்காகவுமான பட்டியல் 2013 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**(ஒ) தேசியக் குழுவின் ஆடை வழங்கும் அனுசரணை ஒப்பந்தம் - 2012 ஆம் ஆண்டு முதல் 2015 வரை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கொள்வனவு வழிகாட்டலின் வழிகாட்டல் 3.1.4 இன் பிரகாரம் ஒப்பந்தக்காரர்கள் தேர்ந்தெடுக்கப்படுகையில் சர்வதேச போட்டி விலை மனுக்கள் கோரப்படுவது அவசியமாக இருந்த போதிலும் மேற்குறித்த ஒப்பந்தத்திற்குரித்தான ஒப்பந்தக்காரர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக 2012 பெப்ரவரி 05 ஆம் திகதி விலை மனுக் கோரப்படுகையில் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் கொள்வனவு வழிகாட்டலின் 6.2.2 வழிகாட்டலின் பிரகாரம் விலை மனுதாரர்களுக்கு விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படுவதற்காக போதிய காலம் வழங்கப்பட்டிராததுடன் ஒரு விலைமனு மாத்திரம் கிடைக்கப்பெற்றிருந்தது.

(ii) அனுசரணையாளரால் மூன்றாண்டு காலத்திற்காக ஐக்கிய அமெரிக்க டொலர் 230,000 தொகை செலுத்துவதற்கு இணங்கியிருந்ததுடன் இலங்கை கிரிக்கட்டால் கம்பனிக்காக விலைமனு சமர்ப்பித்த உசாத்துணை நிறுவகத்திற்குக் கட்டணத்தில் 10 சதவீதம் செலுத்துவதற்கு உடன்பட்டிருந்தது. 2012 யூன் வரையிலும் ஓர் உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதற்கு இலங்கை கிரிக்கட் தவறியிருந்தது. மேலும் விலைமனுக் கோரலின் போது இலங்கை கிரிக்கட்டால் விலை மனுப் பிணை மற்றும் வங்கிப் பிணை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. பின்னர் அனுசரணையாளரால் 2012 யூன் 21 ஆம் திகதி விலை மனு ஒரு தரப்பினால் இரத்துச் செய்யப்பட்டிருந்தது.

(iii) நிதித் தலைவரால் ரீபொக் மேலதிகக் கண்காட்சி ("Branding Exposure for Reebok on Player Clothing") இற்காக 2012 ஆகஸ்ட் 21 ஆம் திகதி விநியோகிக்கப்பட்டிருந்த ஐ.அ.டொலர்கள் 44,166.66 பெறுமதியான பட்டியல் விற்பனைத் தலைவரால் 2012 திசெம்பர் 21 ஆம் திகதி வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் நிதித் தலைவரால் இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் நிதித் தலைவரால் 2012 திசெம்பர் 21 ஆம் திகதி ஐ.அ.டொலர்கள் 19,166.66 இற்குப் புதிய பட்டியல் விநியோகிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், முன்னைய பட்டியல் இரத்துச் செய்யப்படுவதற்கும் புதிய பட்டியல் ஒன்று வழங்கப்படுவதற்கும் காரணமான ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய விடயங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) 2012 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் 2012 யூலை 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்காக மேலதிக வியாபாரப் பெயர் காட்சிப்படுத்தலாக (Additional Branding Exposure) ரூபா 2,383,566 தொகை செலுத்துவதற்கு இலங்கை கிரிகட்டால் அனுசரணையாளரிடம் கோரல் விடுக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், அனுசரணையாளரால் 2013 பெப்ரவரி 20 ஆம் திகதி வரையிலும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிராததுடன் இலங்கை கிரிகட்டால் மேலதிகக் கொடுப்பனவுகள் அறவிட்டுக்கொள்வதற்கு போதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஓ) தேசிய குழுவிற்கு ஆடைகளை வழங்கும் அனுசரணை ஒப்பந்தத்திற்காக மீள விலைமனுக் கோரல் 2012 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2012 ஆகஸ்ட் 01 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கும் மூன்றாண்டு காலப்பகுதிக்காக தேசிய குழுவின் அனுசரணைக்காக இலங்கை கிரிகட்டால் 2012 யூன் 24 ஆம் திகதி மீள விலைமனுக் கோரப்பட்டிருந்ததுடன் விலை மனுக் கோரல் பூர்த்தியான திகதி 2012 யூலை 04 ஆம் திகதியாகக் காணப்பட்டது. இதன் படி, 2012 யூலை 04 ஆம் திகதி விலை மனுக்கள் இரண்டு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. எவ்வாறெனினும், தேசியக் கொள்வனவு வழிகாட்டலின் கோவையில் வழிகாட்டல் 3.1.4 இன் பிரகாரம் தேசிய குழுவின் ஆடைகளை வழங்கும் அனுசரணைக்காக ஒப்பந்தக்காரர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக சர்வதேச போட்டி விலைமனுக் கோரப்படுவதற்கு இலங்கை கிரிகட் தவறியிருந்தது.

(ii) தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கை பெற்றுக்கொள்ளப்படாது 2012 ஆகஸ்ட் 01 ஆம் திகதி ஆரம்பமாகும் மூன்று ஆண்டு காலப்பகுதிக்காக கூடிய விலை மனு சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலைமனுதாரருக்கு ரூபா 63,000,000 இற்கு விலைமனு வழங்கப்பட்டிருந்தது. இவ் விலையில் ரூபா 50,000,000 தொகையான ஆடைகள் மற்றும் ரூபா 13,000,000 பெறுமதியான இறைக் கட்டணங்களும் அடங்கியிருந்தன. எவ்வாறெனினும், மேற்குறித்த ஒப்பந்தக் காலப்பகுதியில் அனுசரணையாளரால் வழங்கப்பட வேண்டிய ஆடைகள் தொடர்பாக விலைகளும் அளவும் இலங்கை கிரிக்கட் பெற்றுக்கொள்ளப்பட்டிராததுடன் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட ஆடைகளின் அளவு மற்றும் பெறுமதியும் இலங்கை கிரிகட்டால் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் 2013 பெப்ரவரி 20 ஆம் திகதி வரையிலும் இலங்கை கிரிக்கட்டால் அனுசரணையாளருடன் ஓர் உடன்படிக்கை மேற்கொள்ள தவறியிருந்தது.

(iii) 2012 செப்தெம்பர் 10 ஆம் திகதி இலங்கை கிரிகட் ரூபா 6,000,000 இற்காக பட்டியல் விநியோகித்திருந்த போதிலும் அனுசரணையாளரால் 2012 ஒக்டோபர் 17 ஆம் திகதி ரூபா 5,100,000 தொகை மாத்திரம் செலுத்தப்பட்டிருந்ததுடன் எஞ்சிய மீதி 2013 சனவரி 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iv) 2012 – 2015 தேசியக் குழு ஆடை வழங்கல் அனுசரணை ஒப்பந்தத்தின் கீழ் ரீபொக் (Reebok) இனால் சமர்ப்பிக்கப்பட்ட இறைக் கட்டணம் ஐ.அ.டொலர் 215,000 ஆகக் காணப்பட்டது. எவ்வாறெனினும், இலங்கை கிரிகட்டின் நலிவான கொள்வனவு முகாமைத்துவம் காரணமாக 2012 யூன் 21 ஆம் திகதி அனுசரணையாளரால் விலை மனு ஏகமனதாக இரத்துச்

செய்யப்பட்டிருந்தது. இதன் விளைவாக அவ் ஒப்பந்தத்திற்காக இலங்கை கிரிகட்டால் மீள விலைமனுக் கோரப்பட்டிருந்ததுடன் புதிய அனுசரணையாளரால் இறைக் கட்டணத்திற்காக ஐ.அ.டொலர் 104,000 இற்கு (பரிமாற்று வீதம் ஐ.அ.டொலர் 1 = இலங்கை ரூபா 125) விலை மனு தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இறுதியில் முதன்முறையாக விலை மனு சமர்ப்பித்த ரீ பொக் உடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிராமையால் ஐ.அ.டொலர் 111,000 மதிப்பீடு செய்யப்பட்ட நட்டம் இலங்கை கிரிகட்டிற்கு நேர்ந்திருந்தது.

**(ஔ) சேவை உடன்படிக்கைகள் பூர்த்திசெய்யப்படலும் சட்ட நடவடிக்கைகளும்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2011 ஒக்டோபர் 01 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படும் இரண்டாண்டு காலப்பகுதிக்காக பிரதான தேசிய பயிற்றுவிப்பாளர் ஒருவர் இலங்கை கிரிகட்டால் சேர்க்கப்பட்டிருந்த போதிலும் அச் சேவை ஒப்பந்தம் 2012 சனவரி 25 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் இலங்கை கிரிகட்டால் ஏகமனதாக முடிவுறுத்தப்பட்டிருந்தது. பயிற்றுவிப்பாளர் சேவை வழங்குனரிடமிருந்து ஐ. அ.டொலர் 250,000 உரிமை கோரி 2012 யூலை 18 ஆம் திகதி தொடர்ந்திருந்த வழக்கு 2013 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் தீர்மானத்திற்காக இருந்ததுடன் இலங்கை தேசிய குழுவிற்காக புதிய பிரதான பயிற்றுவிப்பாளர் 2012 சனவரி 25 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படும் வகையில் இலங்கை கிரிகட்டினால் ஆட்சேர்க்கப்பட்டிருந்தார்.

(ii) பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் 2012 பெப்ரவரி 01 ஆம் திகதி ஆரம்பமாகும் 10 மாத காலப்பகுதிக்காக இலங்கை கிரிகட்டால் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தார். பின்னர் ஒப்பந்தக் காலம் நிறைவடைய முன்னர் இலங்கை கிரிகட்டால் அச் சேவை ஒப்பந்தம் ஏகமனதாக இரத்துச் செய்யப்பட்டிருந்தது. பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தரால் தொழில் வழங்குனரிடமிருந்து ரூபா 50,000,000 தொகையான நட்டம் கோரி தொழில் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு 2013 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் பூர்த்தியடைந்திருக்கவில்லை.

(iii) இலங்கை கிரிக்கட்டால் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கைகள் ஒரு தரப்பினரால் மீறப்பட்டிருந்த காரணத்தால் வெளித்தரப்பினர் இருவரிடமிருந்து ரூபா 46,968,918 தொகையான நட்டம் இலங்கை கிரிகட்டிடமிருந்து கோரப்பட்டிருந்தது. மறு பக்கத்தில் அவ் வெளித்தரப்பினரால் உடன்படிக்கை மீறப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டு இலங்கை கிரிக்கட்டால் ரூபா 351,300,000 தொகையான நட்டம் கோரப்பட்டிருந்தது.

(iv) இலங்கை கிரிக்கட்டிற்கு எதிராக வெளித்தரப்பினரால் தொடரப்பட்டிருந்த நீதிமன்ற வழக்கு மற்றும் வெளித்தரப்பினருக்கு

எதிராக இலங்கை கிரிக்கட்டால் தொடரப்பட்டிருந்த நீதிமன்ற வழக்கு தொடர்பாக இலங்கை கிரிகட்டால் முறையே ரூபா 836,890 தொகையும் ரூபா 7,162,630 தொகையுமான சட்டக் கட்டணங்கள் செலவிடப்பட்டிருந்தன.

**(க) செயற்பாட்டு மீளாய்வு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மாவட்டப் பயிற்றுவிப்பாளர் 2012 ஒக்டோபர் 10 ஆம் திகதி கடமையிலிருந்து விலகிச் சென்றிருந்த போதிலும் 2012 ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்கள் ஆகிய இரு மாதங்களுக்கான சம்பளமாக ரூபா 99,174 தொகை இலங்கை கிரிகட்டால் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், மேலதிகமாகச் செலுத்தப்பட்ட சம்பளத்தை மீள அறவிட்டுக்கொள்வதற்கு இலங்கை கிரிக்கட் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) 2010 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட சர்வதேச இந்திய திரைப்பட கல்லூரியின் (IIFA) அசரண சரண கிரிகட் போட்டியின் கீழ் “பிள்ளைகளுக்காக கிரிகட் ஆரம்பிப்பிற்கான உதவி “In Aid of Cricket for Choldren Initiate” இற்காக நிதியமொன்றை ஸ்தாபிக்கப்படுவதற்காக அனுசரணையாளரால் 2010 திசெம்பர் 17 ஆம் திகதி ரூபா 2,554,609 தொகை இலங்கை கிரிகட்டிற்கு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், நிதியத்தின் நோக்கங்களை எய்துவதற்கு இயலுமானவகையில் வேறான கணக்கில் இந் நிதியம் முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) 2009 முதல் நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்படுவதற்காக ரூபா 850,000 தொகையான ஒப்பந்தத் தொகைக்கு இலங்கை கிரிக்கட்டால் தனியார் கணக்காய்வு நிறுவகத்திற்கு 2009 ஆகஸ்ட் 25 ஆம் திகதி பணி ஒப்படைப்பு செய்யப்பட்டிருந்தது. பின்னர், 2011 ஆகஸ்ட் 04 ஆம் திகதி ரூபா 342,720 தொகை முற்பணமாக இலங்கை கிரிகட்டால் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், அக் கணக்கீட்டு நிறுவகத்தால் 2013 சனவரி 20 ஆம் திகதி வரையிலும் நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) இலங்கை கிரிக்கட்டால் முறையான காசோலைப் பதிவேடொன்று பேணப்பட்டிராததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய தரப்பினருக்கு ஒப்படைக்காது ரூபா 4,379,998 பெறுமதியான 90 காசோலைகள் கையில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தன.

**(கா) இலங்கை பிரிமியர் லீக் (எஸ்எல்பீஎல்) – 2012**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இலங்கை கிரிகட்டிற்கும் அனுசரணையாளர்களுக்கும் இடையே ரூபா 2012 மே 05 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் 5(9) ஆம் பிரிவின் பிரகாரம், இலங்கை பிரிமியர்

லீக் 2012 இற்காக அனுசரணைக் கட்டணமாக ஐ.அ.டொலர் 300,000 தொகை செலுத்துவதற்கு அனுசரணையாளர் உடன்பட்டிருந்தார். எவ்வாறெனினும், அனுசரணையாளரால் ஐ.அ.டொலர் 210,000 மாத்திரமே செலுத்தப்பட்டிருந்ததுடன் எஞ்சிய ஐ.அ.டொலர் 90,000 தொகை 2013 பெப்ரவரி 20 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படாதிருந்தது.

(ii) 2012 மே 05 ஆம் திகதி இலங்கை கிரிகட்டிற்கும் அனுசரணையாளர்களுக்குமிடையே கைச்சாத்திடப்பட்டிருந்த பட்டய உடன்படிக்கையின் 9.2 ஆம் பிரிவின் பிரகாரம் குழுக்களால் இறுதிப் போட்டி நடாத்தப்பட்டதை அடுத்து 10 நாட்களுக்குள் விளையாட்டுத் திடல் வாடகைக்குப் பெறும் கட்டணம் செலுத்தப்பட வேண்டும். எனினும், ரூபா 1,249,528 தொகையான விளையாட்டுத் திடல் வாடகைக் கட்டணங்கள் 2 பட்டய நிறுவகங்களிடமிருந்து அறவிடப்படுவதற்கு 2013 பெப்ரவரி 20 ஆம் திகதி வரையிலும் இலங்கை கிரிக்கட் தவறியிருந்தது.

(iii) அனுசரணையாளருக்கும் இலங்கை கிரிகட்டிற்கும் இடையே 2012 மே 05 ஆம் திகதி ஏற்படுத்தப்பட்டிருந்த உடன்படிக்கையின் தாமதக் கட்டணம் தொடர்பான தண்டப் பணத்தைச் செலுத்துவது தொடர்பில் ஓர் பந்தி உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக 4 பட்டய நிறுவகங்களிடமிருந்து பந்துகளின் விற்பனை தொடர்பில் நிலவிய ரூபா 2,889,129 தொகையான நிலுவை மீதி 2013 பெப்ரவரி 20 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படாது காணப்பட்டது.

(iv) இலங்கை பிரிமியர் லீக் (எஸ்எல்பீஎல்) தொடர்பாக இலங்கை கிரிக்கட்டிற்கும் வரையறுக்கப்பட்ட சமர்செட் என்டர்டேன்மன்ட் வென்சர்ஸ் (தனியார்) கம்பனிக்கிடையே 2013 ஒக்டோபர் 13 ஆம் 2012 மே 05 (திருத்தப்பட்ட) திகதிகளில் உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. எவ்வாறெனினும், அனுசரணை தொடர்பான மிகைக் கட்டணம், தாமதக் கட்டணம் மற்றும் உடன்படிக்கைகள் தயாரிக்கப்படல் தொடர்பான சட்டக் கட்டணங்களை ஏற்கும் விதம் தொடர்பிலான ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக உடன்படிக்கைகள் தயாரிக்கப்படுவது தொடர்பான சட்டக் கட்டணமாக ஏற்கப்பட்ட ரூபா 12,210,000 தொகை முற்றாக இலங்கை கிரிகட்டால் ஏற்கப்பட்டிருந்தது.

**(கி) ஆலோசனைக் கட்டணம் - ரூபா 12,902,250 மற்றும் ஏனைய செலவினங்கள் ரூபா 2,507,462**

உள்நாட்டு கிரிக்கட் கட்டமைப்பை மீளமைத்து நாட்டில் கிரிக்கட் நிர்வாகத்தை மேம்படுத்துவதற்காக சபைக்கு உதவுவதற்காக 2012 யூலை 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் 3 ½ மாத காலப்பகுதிக்காக விசேட ஆலோசகர் ஒருவர் இலங்கை கிரிக்கட்டால் ஈடுபடுத்தப்பட்டிருந்தார். இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(i) இலங்கை கிரிக்கட்டால் விமானப் பயணச்சீட்டுக் கிரயம், ஹொட்டேல்களின் தங்குமிடக் கட்டணங்கள், நாட் கொடுப்பனவுகள் மற்றும் விசாக் கட்டணங்களாக 2012 நவம்பர் 17 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரையான காலப்பகுதிகளுக்காக ரூபா 789,671 தொகை ஏற்கப்பட்டிருந்ததுடன் நிறைவேற்றுக் குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது 2012 யூலை 04 ஆம் திகதி விமானப் பயணச்சீட்டுச் செலவினமாக ரூபா 163,671 தொகை ஆலோசகருக்கு மீளளிக்கப்பட்டிருந்தது. மேலும், உடன்படிக்கை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் அக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது.

(ii) உடன்படிக்கை 3.2 ஆம் பிரிவின் படி, ஒப்பந்தக் காலத்தின் போது ஆலோசகருக்கான பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் ஏறத்தாழ 25 நாட்களின் தொழிற்துறைக் காலமும் சேவையும் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இது இலங்கையில் ஐந்து நாட்கள் முதல் பத்து நாட்கள் வரையான மூன்று தடவைகளை உள்ளடக்கியிருந்தது. எவ்வாறெனினும், ஆலோசனைப் பயணத்தில் ஈடுபட்டிருந்த நாட்களும் உள்ளடங்கலாக இலங்கையில் 21 நாட்கள் மாத்திரம் செலவிடப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கைப் பிரகாரம் உடன்பட்டிருந்த கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது.

**(கீ) சர்வதேச தொலைக்காட்சி உடன்படிக்கை**

2006 சனவரி 25 ஆம் திகதிய 08 ஆம் இலக்க கொள்வனவு முகவர் நிறுவன சுற்றறிக்கை பின்பற்றப்படாது இலங்கை கிரிகட்டால் சர்வதேச தொலைக்காட்சி ஒளிபரப்பு உரிமை ஐ.அ.டொலர் 67,874,000 தொகைக்கு 3 ஆண்டுகளுக்காக 2009 சனவரி 22 ஆம் திகதி அனுசரணையார் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(i) உடன்படிக்கையின் படி, மூன்றாண்டு காலத்திற்காக அனுசரணையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய மொத்த வருமானம் ஐ.அ.டொலர் 67,874,000 தொகையாகும். எவ்வாறெனினும், ஐ.அ.டொலர் 41,468,167 மாத்திரமே இலங்கை கிரிகட்டிற்குக் கிடைக்கப்பெற்றிருந்ததுடன் சர்வதேச கிரிகட் சம்மேளனத்தின் எதிர்கால சுற்றுலா நிகழ்ச்சித்திட்டத்திற்கு உள்ளடக்கப்படாத சில போட்டிகள் இலங்கை கிரிக்கட்டால் உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டதன் காரணமாக ஐ.அ.டொலர் 26,405,833 தொகை அறவிடப்படாது காணப்பட்டது.

(ii) 2012 ஆம் ஆண்டிற்காக உடன்படிக்கையில் மூன்று சுற்றுலாக்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் முன்னைய ஆண்டிற்காக பயன்படுத்தப்பட்ட கட்டணங்கள் 2012 ஆம் ஆண்டிற்காகவும் கருத்திற்கொள்ளப்பட்டிருந்தது.

(iii) உடன்படிக்கையின் 4.1.1 ஆம் பிரிவின் படி, சுற்றுலா ஆரம்பிக்கப்பட முன்னர் 30 நாட்களுக்குள் உடன்பட்ட தொகையில் 50 சதவீதம் சேகரித்துக்கொள்ளப்பட வேண்டும். எவ்வாறெனினும், ஐ.அ.டொலர்

8,023,583 கூட்டுத்தொகையான கொடுப்பனவுகள் 09 முதல் 20 நாட்கள் வரையான காலம் அனுசரணையாளரால் தாமதமாக்கப்பட்டிருந்தன.

(iv) உடன்படிக்கையின் 4.1.2 ஆம் பிரிவின் பிரகாரம் சுற்றுலா ஆரம்பிக்கப்படுகையில் உடன்பட்ட தொகையில் 35 சதவீதம் சேகரித்துக்கொள்ளப்பட வேண்டும். எவ்வாறெனினும் ஐ.அ.டொலர் 5,616,508 கொடுப்பனவுகள் அனுசரணையாளரால் 12 நாட்கள் முதல் 43 நாட்கள் வரையான காலதாமதம் ஏற்பட்டிருந்தது.

(v) உடன்படிக்கையின் 4.1.3 ஆம் பிரிவின் பிரகாரம், சுற்றுலா நிறைவடைய முன்னர், 7 நாட்களுக்குள் உடன்பட்ட தொகையில் 15 சதவீதம் சேகரித்துக்கொள்ளப்பட வேண்டும். எவ்வாறெனினும், ஐ.அ.டொலர் 2,407,075 கூட்டுத்தொகை அனுசரணையாளரால் 17 நாட்கள் முதல் 75 நாட்கள் வரை தாமதமாக்கப்பட்டிருந்ததுடன் நியூசிலாந்து சுற்றுலாவிற்குரித்தான ஐ.அ.டொலர் 54,750 தொகையான அனுசரணைக் கட்டணம் 2013 பெப்ரவரி 20 ஆம் திகதி வரையிலும் அனுசரணையாளரால் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(vi) இலங்கை கிரிகட்டிற்கும் அனுசரணையாளருக்கும் இடையேயான உடன்படிக்கையின் தாமதக் கட்டணத்தில் தண்டப்பணமொன்று தொடர்பான பந்தியொன்று உள்ளடக்கப்பட்டிராததமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. இதன் படி, இலங்கை கிரிகட் நலிவான முகாமைத்துவம் காரணமாக அனுசரணையாளரால் தேவையற்ற விதத்தில் கொடுப்பனவுகள் தாமதிக்கப்பட்டிருந்ததுடன் இது இலங்கை கிரிகட் காசுப்பாய்ச்சலுக்கும் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

**(கு) தொலைக்காட்சி ஒளிபரப்பு உரிமை**

2012 மார்ச் 01 ஆம் திகதி ஆரம்பமாகும் மூன்று வருட காலப்பகுதிக்காக ரூபா 125,000,000 தொகையான பணத்திற்கு தொலைக்காட்சி ஒளிபரப்பு உரிமை இலங்கை கிரிக்கட்டால் 2012 மார்ச் 22 ஆம் திகதி தனியார் நிறுவகமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இலங்கை கிரிக்கட்டிற்கான முக்கிய வருமான மார்க்கம் தொலைக்காட்சி ஒளிபரப்பு வருமானமான போதிலும் தொலைக்காட்சி ஒளிபரப்பிற்கான உரிமைக்காக அனுசரணை தேர்ந்தெடுக்கப்படுவதற்கு மனுக் கோரலின் போது கொள்வனவு நடைமுறைக் கோவை நடைமுறையின் 3.2 மற்றும் 6.2.2 இன் படி போதிய விளம்பரங்களை வழங்காது சிறிய அளவிலான விளம்பரமொன்று 2012 பெப்ரவரி 05 ஆம் திகதி வெளியிடப்பட்டிருந்தது. அதன் விளைவாக ஒரு மனு மாத்திரம் இலங்கை கிரிகட்டிற்கு கிடைக்கப்பெற்றிருந்தது. மேலும் கொள்வனவு நடைமுறையின் நடைமுறை 6.2.2 இன் பிரகாரம் மனுதாரர்களுக்கு தமது மனுக்களைச் சமர்ப்பிப்பதற்காக போதிய காலம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கொள்வனவு நடைமுறைக் கோவை நடைமுறையின் 2.14.1 இன் பிரகாரம், ஒப்பந்தப் பெறுமதி ரூபா 50 மில்லியன் மீறப்படின் இது அமைச்சுக் கேள்விச் சபைக்கு தொடர்புபடுத்தப்பட வேண்டிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் (TEC) பரிந்துரையைப் பெற்றுக்கொள்ளாது 2012 ஏப்ரல் 05 ஆம் திகதி இலங்கை கிரிக்கட் நிறைவேற்றுக் குழுவால் அக் கேள்வி அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்படுகையில் மனுப் பிணை மற்றும் வங்கிச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்படுவதற்கு இலங்கை கிரிக்கட் தவறியிருந்தது.

(iii) உடன்படிக்கையின் 3.4.1 ஆம் பிரிவின் பிரகாரம், போட்டி ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் உடன்பட்டிருந்த தொகையில் 25 சதவீதம் சேகரித்துக்கொள்ள வேண்டும். எவ்வாறெனினும், இலங்கை கிரிக்கட்டின் நலிவான முகாமைத்துவம் காரணமாக ரூபா 17,050,000 கூட்டுத்தொகையான கொடுப்பனவு அனுசரணையாளரால் 8 நாட்கள் முதல் 183 நாட்கள் வரை தாமதமாக்கப்பட்டிருந்தது.

(iv) உடன்படிக்கையின் 3.4.2 ஆம் பிரிவின் பிரகாரம், போட்டி நிறைவடைவதற்கு முன்னர் உடன்பட்ட தொகையில் 25 சதவீதம் சேகரித்துக்கொள்ளப்பட வேண்டும். எவ்வாறெனினும், இலங்கை கிரிக்கட்டின் நலிவான முகாமைத்துவம் காரணமாக அனுசரணையாளரால் ரூபா 12,812,500 கூட்டுத்தொகையான கொடுப்பனவு 11 நாட்கள் முதல் 176 நாட்கள் வரை தாமதமாக்கப்பட்டிருந்தது.

(v) உடன்படிக்கையின் 3.1.2 ஆம் பிரிவின் பிரகாரம், போட்டி நிறைவடைவதற்கு முன்னர் 30 நாட்களுக்குள் உடன்பட்டிருந்த மொத்த தொகையும் சேகரித்துக்கொள்ளப்பட வேண்டும். எவ்வாறெனினும், இலங்கை கிரிக்கட்டின் நலிவான முகாமைத்துவம் காரணமாக ரூபா 14,100,000 கூட்டுத்தொகையான கொடுப்பனவு அனுசரணையாளரால் 45 நாட்கள் முதல் 176 நாட்கள் வரை தாமதமாக்கப்பட்டிருந்தது.

(vi) இலங்கை கிரிக்கட்டிற்கும் அனுசரணையாளருக்கும் இடையே கைச்சாத்திடப்பட்டிருந்த உடன்படிக்கையின் படி தாமதக் கொடுப்பனவில் தண்டப்பணம் தொடர்பான ஓர் பந்தி உள்ளடக்கப்பட்டிராததுடன் கொடுப்பனவிற்காக குறித்த தினத்தின் முன்னர் பட்டியல் வழங்கப்படுவதற்காக இலங்கை கிரிகட் முறையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. ஆகையால் அத் தொகையைத் தீர்த்துக்கொள்வதற்காக அனுசரணையாளரால் தமக்குத் தேவையான வகையில் காலம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

**(கூ) உள்நாட்டுப் போட்டிகள் - 2012**

மீளாய்வாண்டின் போது 22 போட்டிகளில் ரூபா 255.26 மில்லியன் தொகையான வருமானம் இலங்கை கிரிக்கட்டினால் மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியான வருமானம் 23 சதவீதத்திற்கும் 413 சதவீதத்திற்கும் மிகைப்பட்டிருந்தது. மேலும் நடுவர்களின் கட்டணம்,

போட்டித் தீர்வுக் கட்டணங்கள் மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டிராததுடன் 16 போட்டிகளுக்காக நடுவர்களின் கட்டணம், போட்டித் தீர்வுக் கட்டணங்களாக இலங்கை கிரிக்கட்டால் ரூபா 16,542,507 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், ‘‘நடுவர்களின் கட்டணம்’’ மற்றும் ‘‘போட்டித் தீர்வுக் கட்டணங்கள்’’ கட்டண விபரம் மற்றும் கொடுப்பனவு விபரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(கெ) பியர் விற்பனையின் அனுசரணை உரிமை**

3 ஆண்டு காலப்பகுதிக்காக இலங்கை கிரிக்கட் மற்றும் அனுசரணையாளரால் கையொப்பமிடப்பட்ட பியர் விற்பனை உடன்படிக்கை தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பியர் விற்பனை உரிமைக்காக தேர்ந்தெடுக்கையிலும் வழங்கப்படலையும் 2006 சனவரி 25 ஆம் திகதி வழங்கப்பட்ட தேசிய கொள்வனவு நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கு இலங்கை கிரிக்கட் தவறியிருந்தது. மேலும், ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையில், தாமதக் கட்டணத்திற்காக விதிக்கப்பட்ட தண்டப்பணம் தொடர்பாக ஓர் பந்தி உள்ளடக்கப்பட்டிராமை கண்டறியப்பட்டது.

(ii) உடன்படிக்கையின் 2.2 ஆம் பிரிவின் படி, உடன்படிக்கை கைச்சாத்திடப்படுகையில் அனுசரணையாளரால் ரூபா 1,800,000 தொகை 2012 மார்ச் 01 ஆம் திகதி கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். எவ்வாறெனினும், அனுசரணையாளரால் 319 நாட்கள் தாமதத்துடன் 2013 சனவரி 13 ஆம் திகதி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(iii) உடன்படிக்கையின் 2.3 ஆம் 2.4 ஆம் பிரிவின் பிரகாரம், சர்வதேச டெஸ்ட் போட்டிகள் மற்றும் சர்வதேச ஒரு நாள் போட்டி ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் 3 நாட்களுக்குள் ரூபா 500,000 தொகையும் ரீ 20 போட்டி தொடர்பாக ரூபா 400,000 தொகையும் செலுத்தப்படுவதற்கு தேவைப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக இங்கிலாந்திற்கு எதிராக இலங்கைக்கிடையே ஒவ்வொரு டெஸ்ட் போட்டிகளுக்காக ரூபா 1,500,000 தொகை செலுத்தப்படுவதற்கு அனுசரணையாளரால் இணங்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், அனுசரணையாளர் கட்டணம் அறவிடப்படுவதற்கு இலங்கை கிரிக்கட்டினால் உாயி காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) போட்டிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் 3 நாட்களுக்குள் உடன்பட்ட தொகை சேகரிக்கப்பட வேண்டிய போதிலும், அனுசரணையாளரால் ரூபா 9,800,000 தொகை கொடுப்பனவு 03 முதல் 51 நாட்கள் தாமதமாக்கப்பட்டிருந்தது.

(v) நியூசீலாந்து சுற்றுலா 2012 ஒக்டோபர் 30 ஆம் திகதி முதல் நவம்பர் 29 வரையான காலப்பகுதி நடாத்தப்பட்ட போதிலும் ரூபா 3,300,000 தொகை 2013 பெப்ரவரி 20 ஆம் திகதி அறவிடப்படாது காணப்பட்டது.

**(கே) தம்புள்ளை சர்வதேச கிரிக்கட் விளையாட்டு மைதானத்தைப் பராமரித்தல்**

2002 ஆம் ஆண்டின் போது குத்தகைக் காணி ஒன்றில் மேற்குறித்த விளையாட்டு மைதானத்தை நிர்மாணிப்பதற்காக ஏறத்தாழ ரூபா 700 மில்லியன் தொகை இலங்கை கிரிக்கட்டினால் செலவிடப்பட்டிருந்ததுடன் குத்தகையாளருக்கு வருடாந்த குத்தகை வாடகையான ரூபா 340,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. விளையாட்டு மைதானப் பராமரிப்பிற்காக ரூபா 7,556,447 தொகை (சம்பளம் அற்ற) இலங்கை கிரிக்கட்டினால் செலவிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது பெறுமானத்தேய்விற்காக ரூபா 49,864,346 தொகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், விளையாட்டு மைதானம் வாடகைக்கு வழங்கியதன் மூலம் மீளாய்வாண்டின் போது ரூபா 1,199,033 தொகை மாத்திரம் உழைக்கப்பட்டிருந்தது. மேலும், 2011 ஆம் 2012 ஆம் ஆண்டுகளின் போது இலங்கையில் நடாத்தப்பட்ட சர்வதேச கிரிக்கட் போட்டிக்காக முறையே ரூபா 4,477,552 இற்கும் ரூபா 3,185,535 இற்கு கொழும்பு கிரிக்கட் மைதானங்கள் இரண்டு இலங்கை கிரிக்கட்டினால் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அம் மைதானம் சர்வதேச போட்டிகளை நடாத்துவதற்காக பயன்படுத்தப்படுவது தொடர்பாக காரணமாகியிருந்த விடயங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(கை) சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இலங்கை கிரிக்கட் ஞாபகார்த்த விற்பனைக்கூடம் 2009 யூன் 01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட மூன்றாண்டு காலத்திற்காக ரூபா 150,000 தொகை மூன்று மாத வாடகைக்குக் குத்தகைக்கிடப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் படி, ஒவ்வொரு காலாண்டின் ஆரம்பத்தின் முன்னரும் வாடகைப் பணம் செலுத்துவதற்கு குத்தகையாளர் உடன்பட்டிருந்தார். எவ்வாறெனினும், 2009 யூன் 06 ஆம் திகதி முதல் 2011 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கான ரூபா 1,744,250 தொகையான குத்தகைப் பணம் 24 மாத காலதாமதத்துடன் 2011 யூன் 09 ஆம் திகதி செலுத்தப்பட்டிருந்ததுடன் அத் தாமதக் கொடுப்பனவிற்காக எவ்வித பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) இலங்கை கிரிக்கட்டிற்கும் அனுசரணையாளருக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் 9 ஆம் பந்திக்கு முரணாக 2012 யூன் 01 ஆம் திகதி முதல் 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்காக ரூபா 240,000 மூன்று மாத கால வாடகைக்கு அக் குத்தகையாளருக்கு ஞாபகார்த்த விற்பனைக் கூடம் இரு காலாண்டுகளுக்காக இலங்கை கிரிக்கட்டினால் மீள குத்தகைக்கிடப்பட்டிருந்தது. அதன் விளைவாக ரூபா 80,000 தொகையான ஒரு மாத வாடகை இலங்கை கிரிக்கட்டிற்குக் கிடைக்கப்பெறாது போயிற்று. மேலும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் குத்தகைப் பணம் செலுத்தப்பட வேண்டிய திகதி தொடர்பான பந்தி ஒன்று உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இதன் படி, மூன்று மாத காலக் கொடுப்பனவு குத்தகையாளரால் இரண்டு மாதங்கள் முதல் நான்கு மாதங்கள் வரையான

காலதாமதப்படுத்தப்பட்டிருந்ததுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட காலத்தை நீடிக்காது ஞாபகார்த்த விற்பனைக் கூடம் நடாத்தப்படுவது தொடர்பாக மேற்குறித்த தரப்பினருக்கு இலங்கை கிரிக்கட்டால் இடமளிக்கப்பட்டிருந்தது.

**(கொ) ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ரூபா 39,886,726 பெறுமதியான நிர்மாணிப்பு வேலைகள் 07 ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்படுகையில் இலங்கை கிரிகட்டினால் கொள்வனவு நடைமுறை பின்பற்றப்பட்டதா என்பது குறித்து உறுதிப்படுத்துவதற்காக தேவையான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட அந் நிர்மாணிப்பு வேலைகளுக்காக முன்னங்கீகாரம் நிறைவேற்றுக் குழுவால் வழங்கப்பட்டிராமை கண்டறியப்பட்டது.

(ii) அளவீட்டுப் பத்திரம், மதிப்பீடு, மாதிரிகள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் (TEC) அங்கீகாரம் கருத்திற்கொள்ளப்படாது இலங்கை கிரிகட்டினால் ஒப்பந்தக்காரர்களுக்காக கேள்வி வழங்கப்பட்டிருந்தது.

(iii) மீளாய்வாண்டின் போது 4 சந்தர்ப்பங்களில் கேள்வி கோரப்படாது, ரூபா 1,928,112 பெறுமதியான நேரடிக் கொள்வனவுகள் கட்டளைகள் வழங்குனர்களுக்கு/ ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்படுவதன் மூலம் இலங்கை கிரிக்கட்டினால் பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(iv) கொள்வனவு நடைமுறை வழிகாட்டியின் 5.4.4 வழிகாட்டலுக்கு முரணாக ஒவ்வொரு ஒப்பந்தத்தின் ஒப்பந்தத் தொகையில் 25 சதவீதம் முதல் 75 சதவீதமான ரூபா 17,767,323 கூட்டுத்தொகையான முற்பணம் 10 சந்தர்ப்பங்களின் போது இலங்கை கிரிக்கட்டால் ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

**(கோ) மனித வள முகாமைத்துவம்**

**பதவியணியினர் நிலை**

இலங்கை கிரிக்கட்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணி ஒன்றில்லாததுடன் மீளாய்வாண்டினதும் முன்னைய இரு ஆண்டுகளுக்குமான உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| வகை | நிரந்தர | | | ஒப்பந்தம் | | | கூட்டுத்தொகை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை** | | | | | | | |
| | **2012** | **2011** | **2010** | **2012** | **2011** | **2010** | **2012** | **2011** |
| முகாமைத்துவம் | 04 | 01 | 03 | 63 | 48 | 56 | 67 | 49 |
| நிறைவேற்றுனர் | 07 | 09 | 09 | 61 | 55 | 86 | 68 | 64 |
| எழுதுவினைஞர் மற்றும் ஏனையவர்கள | 12 | 14 | 15 | 72 | 74 | 98 | 84 | 88 |
| மொத்தம் | 23 | 24 | 27 | 196 | 177 | 240 | 219 | 201 |

**(கௌ) ஆட்சேர்ப்பு மற்றும் தனியாள் போவை பேணப்படல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 1,460,000 கிரயத்திற்கு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தால் தயாரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் ஏற்பாடுகள் பின்பற்றப்படாது இலங்கை கிரிகட்டினால் பதவியணி ஆட்சேர்ப்பு இடம்பெற்றிருந்தது.

(ii) இலங்கை கிரிக்கட்டினால் அந்தரங்கச் செயலாளர் பதவி மற்றும் ஊடக மற்றும் தொடர்பாடல் முகாமையாளர் பதவிகளுக்காக தேவையான கல்வித் தகைமைகளும் அனுபவங்களும் இல்லாத உத்தியோகத்தர்கள் 2012 யூன் 01 ஆம் திகதி சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர். மேலும் அவ் விண்ணப்பதாரிகள் இருவரும் விண்ணப்பப் படிவங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் தினத்திலிருந்து 1 முதல் 13 நாட்கள் வரையான தாமதத்தில் அவர்களது விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பித்திருந்தனர்.

(iii) 2012 செப்தெம்பர் 01 ஆம் திகதி முதல் 01 வருட ஒப்பந்தக் காலப்பகுதிக்குத் தேவையான தகைமைகள் கருத்திற்கொள்ளப்படாது பாதுகாப்பு மற்றும் மோசடித் தடுப்பு முகாமையாளராக 69 வயதான ஒரு நபர் ஆட்சேர்க்கப்பட்டிருந்தார். மேலும் இதற்கான அவரது விண்ணப்பப் படிவம் 2012 மே 31 ஆம் திகதி அல்லது இதற்கு முன்னர் இலங்கை கிரிகட்டின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் இது 2012 யூன் 14 ஆம் திகதி ரீ – 20 உலகக் கிண்ண காரியாலயத்தின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(iv) 24 மாகாண மற்றும் மாவட்டப் பயிற்சியாளர்கள் இரண்டாண்டு காலப்பகுதிக்காக 2012 மே 15 ஆம் திகதி ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். எவ்வாறெனினும், 5 பயிற்றுவிப்பாளர்களின் வாழ்க்கைத் தரவுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் படி, தேவையான தகைமைகள் பயிற்றுவிப்பாளர்களிடம் உள்ளதா என்பது குறித்து கணக்காய்வின் போது உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது.

(v) மீளாய்வாண்டின் போது ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட 33 உத்தியோகத்தர்களுக்கு உரித்தான கல்வி மற்றும் பிறப்புச் சான்றிதழ், ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் அவர்களது தனியாள் கோவைகளில் இருக்கவில்லை.

**(ச) நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இலங்கை கிரிக்கட்டின் உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக வேறான உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்படுவதற்குப் பதிலாக கணக்காய்வுத் துறையில் ஈடுபட்டுள்ள ஓர் நிறுவகத்திற்கு 2012 யூலை 12 ஆம் திகதி முதல் கணக்காய்வு நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் இலங்கை கிரிக்கட்டினால் எவ்வித உள்ளகக் கணக்காய்வு அறிக்கையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தியின் படி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவொன்று ஸ்தாபிக்கப்படுவதற்கும் ஆகக் குறைந்தது 3 மாதங்களுக்கு ஒரு தடவை கூட்டங்கள் கூட்டப்படுவதற்கு இலங்கை கிரிக்கட் தவறியிருந்தது.

(iii) 2006 சனவா 25 ஆம் திகதிய 08 ஆம் இலக்க தேசிய கொள்வனவு நடைமுறை சுற்றறிக்கையின் 4.2.1 ஆம் பந்தியின் படி பிரதான கொள்வனவுத் திட்டமொன்றும் 2012 ஆம் ஆண்டிற்காக கொள்வனவுத் திட்டமொன்றும் இலங்கை கிரிகட்டினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.14 விளையாட்டுக் கழகங்களால் கணக்குகள் சமர்ப்பிக்கப்படல்.

1993 இன் 47 ஆம் இலக்க விளையாட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் சகல விளையாட்டுக் கழகங்களாலும் வருடாந்தக் கணக்குக் கூற்றுக்கள் கணக்காய்விற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் நியமிக்கப்பட்ட தகைமை பெற்ற கணக்காய்வுக் கம்பனி ஒன்றிற்கு சமர்ப்பிக்கப்பட்டு அடுத்துவரும் ஆண்டின் பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் 12 விளையாட்டுக் கழகங்களால் 2012 ஆம் ஆண்டிற்குரித்தான இறுதிக் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.